# சிறுபான்மை பிரச்னை ஜெர்மனியில் இல்லை

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் 389

மலர் 12
இதழ் 304
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 28 ஷவ்வால் 13 ஞாயிற்றுக்கிழமை (13-12-70)




## துரிதமான தொழில் வளர்ச்சியே காரணம்

### தூதுவர் ஃபவுல் வெட்டர் தகவல்

யாழ்ப்பாணம், ஞாயிறு "ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் சிறுபான்மை மக்கள் பிரிவு ஒன்று இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் இங்கு போல் அங்கு சிறுபான்மை மக்கள் பிரச்னை இல்லை"

இவ்வாறு இலங்கையில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தூதுவர் பேராசிரியர் டாக்டர் ஹபில் ஹெல்மட் ஃபவுல் வெட்டர் தெரிவித்தார்.

டாக்டர் ஃபவுல் வெட்டர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். இலங்கையின் ஒரே ஒரு மாகாண தேசிய தினசரியான 'ஈழநாடு' காரியாலயத்துக்கும் அவர் நேற்று காலையில் விஜயம் செய்தார்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் இலங்கைக்கும் ராஜதந்திர உறவுகள் இப்பொழுதுதான் பலப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டிய திரு. வெட்டார் கடந்த காலத்தில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு பற்றி செய்திகளையும் தகவல்களையும், கட்டுரைகளையும் பிரசுரித்து உதவியமைக்காக 'ஈழநாடு' பத்திரிகைக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்.

ஜெர்மன் ஜனநாயக் குடியரசில் சிறுபான்மை மக்கள் பிரச்னை உண்டா என்று கேட்டபொழுது அவர் விரிவாக பதிலளித்தார்.

உலக யுத்தத்தின் பின்னர் சோவியத் யூனியனிலிருந்து குடிபெயர்ந்து வந்த மக்கள் பிரிவு ஒன்று இருந்தது இந்த மக்களின் அபிவிருத்திக்கும் கல்வி, கலாசார வளர்ச்சிக்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு விசேஷ ஒழுங்குகள் செய்து கொடுத்தது. அவர்களின் மொழிவளர்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. பிரதேச தேசிய சட்டசபையிலும் அவர்களுக்கு விசேஷ பிரதிநிதித்துவம் உண்டு. ஆட்சிக்கும் வழிசெய்து கொடுக்கப்பட்டது. ஆனால் கைத்தொழில் மற்றும் நாட்டின் ஒருமித்த வளர்ச்சியின் காரணமாக அந்த மக்களே தனித்து வாழ்வதைப் புறக்கணித்து விட்டு நாட்டின் பெரும் பான்மை மக்களுடன் இணைந்து செயல்படத் தொடங்கி விட்டார்கள். அந்த மக்களில் குறிப்பாக இளைஞர்கள் தொழில்துறைகளிலும், தேசஅபிவிருதியிலுமே தம்கவனத்தை செலுத்துகிறார்கள் துரிதமான தொழில் வளர்ச்சியின் காரணமாக சிறுபான்மைப் பிரச்னை அங்கு இல்லை, இருந்தாலும் உங்கள் பிரச்னை போன்றதல்ல எமக்குள்ளது. என்றார் திஃபவுல் வெட்டர்.

இலங்கையுடன் கலாசார உறவுக்கான ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள விரும்புவதாகவும், கல்வி, விளையாட்டு, சுகாதாரம், உபகாரச் சம்பளம் போன்ற துறைகளில் பரிவர்த்தனைக்குக்கு இதில் ஏற்பாடு செய்து கொள்ளப்படும் என்றும் தெரிவித்த அவர் தொழில்உற்பத்தித்றையில், விற்பன்னர்களையும் அறிஞர்களையும் இலங்கைக்குக் கொடுத்துதவுவதில் தமது அரசு அக்கறை எடுக்கும் என்றும் சொன்னார்.

# 'மனிதனை நேசிக்காமல் கடவுளை வணங்குவதில் அர்த்தமில்லை'

## யாழ்ப்பாணத்தில் ஸ்ரீசுவாமி சிதானந்த மகராஜ்

— எஸ்: கே. காசிலிங்கம் —



யாழ்ப்பாணம், ஞாயிறு "மனிதர்களிடத்தில் அன்பு செலுத்தாமல் கடவுள்மீது அன்பு செலுத்துவது நீரின் மேல் எழுதுவதற்கு ஒப்பானது" என திவ்ய ஜீவன சங்கத் தலைவர் ரிஷிகேசம் ஸ்ரீமத் சிதானந்த மகராஜ் சுவாமிகள் கூறினார்.

திவ்விய ஜீவன சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் புதிய ஆசிரம மண்டபத்தை நேற்று திறந்துவைத்துப் பேசுகையில் சுவாமிஜி மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீமத் சுவாமிகள் நேற்று ...

...மைகளை எடுத்து விளக்கினர் தம்மையும் இவ்வைபவத்தில் அழைத்துப் பேசவைத்தது, சிங்களச் சமூகத்திற்கும், பௌத்த மதத்திற்கும் அளித்த கௌரவமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிங்களத்தில் பேச அனுமதித்தமைக்காக அவர் நன்றி கூறினர்.

சேய்க் ரசடுக் ஹுசேன் லெப்பே பேசுகையில் கூறியதாவது:-

'தருமம் செய்பவருக்கு கடவுள் சன்மானம் அளிப்பார் என்பது எமது சமயக் கொள்கை. கடவுள் தூதுவர் மூலம் தமது பிரதிநிதிகளை இங்கு அனுப்பியுள்ளார். மனிதரை தெய்வீகத்துக்கு அழைத்துச் செல்லும் வழியையே சமய போதனைகள் கூறுகின்றன. இதனால் சகல மதங்களும் ஒரே அடிப்படையிலேயே அமைந்துள்ளன' என்றார்.

வண எல். ஆர். அன்ரனி பேசுகையில்: 'இனம் மதம் என்ற பாகுபாடிருப்பினும் இங்கு கூடியுள்ளவர்கள் ஆஸ்திகர் என்ற ஒருமைப் பாட்டின் காரணமாக ஒன்...

"யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வேலணை

# பஸ் நிலையங்கள்

## நவீனமாக்கப் படவேண்டும்"

யாழ்ப்பாணம். ஞாயிறு 'புதிய வருடத்தில் வட மாகாண பஸ்சேவை சீரடையுமென நம்பப்படுகிறது. வடபிராந்தியத்தில் நிலவும் பஸ்சேவை சீர்கேடுகளைத் தவிர்க்கும் பொருட்டு பல நல்ல பஸ்களை இங்கு அனுப்பி வைப்பதாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த இலங்கைப் போக்குவரத்துச்சபை உப தலைவர் திரு, பேர்ஸி எகலியகொடை உறுதி தெரிவித்து சென்றுள்ளார்.

கிராமப்புறங்களில் பல பஸ்கள் வீதிகளிலேயே பழுதடைந்து சேவைகள் ...

... பற்றியும்இம்மகஜரில் கூறப்பட்டுள்ளது.

யாழ். நகரிலும் வேலணை, மிருசுவில்துறை, கிளிநொச்சி மற்றும் பிரதான இடங்களிலும் உள்ள பஸ்நிலையங்கள் நவீனமுறையில் அமைக்கப் படவேண்டுமென்றும் பஸ் சேவைகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றும் மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் டிப்போவை வடபிராந்தியத்தின் தலைமைக்காரியாலயமாக்குமாறு பலர் உதவித் தலைவரிடம் கருத்துத் தெரிவித்தனர்.

# 1990-ம் ஆண்டின் அபிவிருத்திக்கு

## இப்பொழுதே திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பேர்ஸி எகலிய கொடை உறுதி தெரிவித்து சென்றுள்ளார்.

கிராமப்புறங்களில் பல பஸ்கள் வீதிகளிலேயே பழுதடைந்து சேவைகள் தடைப்படுவதையும் பல பஸ்கள் சேவையிலீடுபடத் தகுதியற்றிருப்பதாயும் இ. போ. ச. வடபிரதேச முகாமையாளர் சபை உதவித் தலைவரிடம் எடுத்துவிளக்கினுர். வட பிரதேச முகாமையாளர் திரு. கே. நாகரத்தினம் மூலம் பல பஸ் பிரயாணிகள் சங்கத்தினரும் கோண்டாவில் டிப்போவில்வைத்து உதவித்தலைவர் திரு எகலிய கொடையிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர் வட பகுதி பஸ்சேவை சீர்கேடுகள் பற்றியும், யாழ். பஸ் நிலையத்தின் குறைபாடுகள் போஜவை வடபிராந்தியத்தின் தலைமைக்காரியாலயமாக்குமாறு பலர் உதவித் தலைவரிடம் கருத்துத் தெரிவித்தனர்.

யாழ்.பஸ்நிலையம், காரைநகர், வேலணை முதலிய இடங்களை திரு. பேர்ஸி எகலிய கொடை சென்று பார்வையிட்டதுடன் பொதுமக்கள்பலரிடமிருந்தும்போக்குவரத்துச் சிரமங்கள் பற்றி கேட்டறிந்து குறிப்பெடுத்துக்கொண்டார்.

தாம்கொழும்பு சென்றதும் வடபகுதிக்கு நல்லபஸ்கள் அனுப்பவேண்டியதன் அவசியம்பற்றி சபையிடம் எடுத்துக்கூறி ஏறக்குறைய 20 பஸ்களையாவது இங்கு அனுப்ப முயற்சிப்பதாக அவர் உறுதி தெரிவித்தார்.

(குவிம)

புதிய ஆசிரம மண்டபத்தை நேற்று திறந்துவைத்துப் பேசுகையில் சுவாமிஜி மேற்கண்டவாறு கூறினுர்.

ஸ்ரீமத் சுவாமிகள் நேற்று விமானமூலம் வந்துசேர்ந்தார் சங்கத்தைச்சேர்ந்தவர்களும் மற்றும் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் சுவாமிஜியை பலாலி விமான நிலையத்தில் வரவேற்றனர்.

நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகில் ஒரு லட்சம்ரூபாசெலவில் கட்டப்பட்ட ஆசிரம மண்டபத்தையும் மண்டபத்தினுள் திவ்யஜீவன சங்கத்தின் அமைப்பாளரான ஸ்ரீமத் சிவானந்த சரஸ்வதியின் சிலையையும் மகராஜ் சுவாமிகள் திறந்துவைத்தார்.



சுவாமிஜி மேலும் பேசுகையில் கூறியதாவது:

பிறர் துன்பத்தைக் கண்டு மனிதன் வருந்தவேண்டும். சமயத்தின் நோக்கம் இதுதான், நடமாடும் தெய்வமான மனிதனை மனிதன் வணங்கவேண்டும். பிற்கால சுபிட்சத்திற்காகவும் சகோதரத்துவத்தை நிலைநாட்டவும், சமயங்களிடையே ஒற்றுமை நிலைபெறவும் நாம் அனைவரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் என்ற நிலை உருவாகவேண்டும்.

மானிடர்கள்மீது அன்பு செலுத்தாமல் கடவுளை மட்டும் வணங்குபவர்களைக் கடவுள் 'நேசிக்கமாட்டார்', ஆனல் மானிடர்களை நேசித்து கடவுளை வணங்காதவர்களுக்கு கடவுளின் திருவருள் கிடைக்கும்,

பௌத்த இஸ்லாமிய கிறிஸ்தவ இந்து மதத்தைச் சேர்ந்த மக்களும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டதுடன் அவ்வப் பெரியார்களும் உரையாற்றினர். உரையாற்றிய யாவருக்கும் மகராஜ் சுவாமிகள் எழுந்து சென்று தாமே மாலை அணிவித்துக் கௌரவித்தார்.

திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது,

யாழ்ப்பாண நாகவிகாரை பிரதம குரு வண. நந்தராம நாயக்கதேரோ சிங்களத்தில் பேசுகையில், இந்து மதத்தினதும், பௌத்த மதத்தினதும் உற்பத்தி இந்தியா தானென்றும், பௌத்த போதனைகள் பாளி மொழியிலும், இந்துமத போதனைகள் சமஸ்கிருதத்திலும் இருப்பதுதான் அவற்றிடையே நிலவும் வித்தியாசம் என்றும் கூறி, இரு மதங்களிடையேயுமுள்ள ஒற்றுமை பேசுகையில்: 'இனம் மதம் என்ற பாகுபாடிருப்பினும் இங்கு கூடியுள்ளவர்கள் ஆஸ்திகர் என்ற ஒருமைப்பாட்டின் காரணமாக ஒன்றுனவர்கள். அன்பு என்ற இணைப்புப் பாலத்தின் மூலம் நாம் ஒன்றுபட்டுள்ளோம் நமது இலட்சியம் யாவும் இறைவனை நோக்கியே செல்லுகின்றன' என்ருர்.

திரு செ. தனபாலசிங்கம் தமது தலைமையுரையில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் இந்த ஆச்சிரம மண்டபத்தைக் கட்டிமுடித்துள்ளோம், கட்டிடத்தை பூரணமாகக் கட்டிமுடிக்க இன்னும் 50,000 ரூபா தேவைப்படுகிறது. சகல சமயங்களுக்கும் நடுநாயகமாக விளங்கும் இம் மண்டபத்தை கலை, கலாச்சார, இலக்கிய வளர்ச்சிக்காக உழைக்கும் சங்கங்களின் உபயோகத்துக்கும் வழங்குவோம் என்ருர்.

பிரமஸ்ரீ ச குமாரசாமிக குருக்களும் பேசினுர் புறக்டர் கனகரத்தினம் யாழ் திவ்விய ஜீவன சங்கச்சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினுர். இறுதியில் மகேசுவர பூசையும் இடம் பெற்றது.

# அபிவிருத்திக்கு இப்பொழுதே திட்டம்

— வா. மாணிக்கம் —

யாழ்ப்பாணம், ஞாயிறு

"1990-ம் ஆண்டில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் எப்படிப்பட்ட கைத்தொழிலை விருத்தி செய்யவேண்டும் என்று இப்பொழுதே எங்கள் நாட்டில் தீர்மானித்துள்ளோம். 1.8 கோடிமக்களின் எதிர்கால வாழ்க்கை பற்றி 20 வருஷத்துக்கு முன் கூட்டியே ஆராய்ந்துள்ளோம். கற்பனையிலும் நினைக்க முடியாதளவுக்கு எமது நாட்டைவளப்படுத்த திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகின்ருேம்"

இலங்கையிலுள்ள ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுத்தூதுவர் டாக்டர் திரு. பவுல்வெட்டர் யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட தேநீர்விருந்து வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையினர் யாழ். சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் திரு. பவுல்வெட்டருக்குத் தேநீர் விருந்தளித்து உபசரித்தனர் திரு. எம் ஸி சுப்பிரமணியம் எம் பீ இவ்வைபவத்திற்குத் தலைமைவகித்தார்,

ஜெர்மன் தூதர் மேலும் கூறியதாவது:

ஜெர்மன் தூதர் தமது வாழ்க்கைபற்றிக் குறிப்பிடுகையில் ஆரம்பத்தில் மேசன் தொழில் பார்த்துவந்த தாம் பின்னர் ஆசிரியராகவும் பல்கலைக்கழகவிரிவுரையாளராகவும் பணியாற்றியதாகவும் டாக்டர் பட்டம் பெற்றுப்பல நாடுகளிலும் தூதுவராகப்பணி புரிந்துள்ளதாகவும் கூறினுர்

திரு. எம். ஸி. சுப்பிரமணியம்எம்.பி.பேச்சுகையில் "சிறுபான்மைத்தமிழர்களைப் பொறுத்தவரையில் கல்வி, பொருளாதார விஷயங்களிலும் சமூக நிலையிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் ஒதுக்கப்பட்டுள்ளனர். ஆதலால் உயர்கல்விப் படிப்புக்கு தங்கள் நாட்டில் வசதி செய்து உதவவேண்டும்" எனக்கேட்டுக் கொண்டார். இதுசம்பந்தமான மகஜரொன்றையும் திரு. சுப்பிரமணியம் தூதுவரிடம் கையளித்தார்.

மகாசபை உபதலைவர் திரு. மார்டின் செல்லையா, பொதுக்காரியதரிசி திரு. ஜே. அன்ரனி ஆகியோரும் பேசினர்.

# கிழக்கு மாகாண மாணவருக்கு உயர் கல்விவாய்ப்புக்கிடைத்தது

## 1107பேரில் 23முஸ்லிம்கள் மட்டுமேதெரிவு

### கல்வி அமைச்சு அறிக்கை தரும் விளக்கம்

கோட்டை, சனி

'பல்கலைக்கழகங்களில்விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் முதலான துறைகளுக்கு இம்முறை மொத்தம் 1107 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களில் 23 பேர் மட்டும்தான் முஸ்லிம் மாணவராவர்'' எனக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பிரஸ்தாப உயர்கல்வித் துறைகளில் முஸ்லிம் மாணவர்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டதாயும் முஸ்லிம் மாணவர்கள் இத்துறைகளில் அதிகம் சேர்வதற்கு வாய்ப்பாக பல்கலைக்கழக விதிமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டதாகவும் கூறப்பட்ட புகார்களுக்குப் பதிலளிக்குமுகமாகக் கல்வி அமைச்சு விரிவான ஓர் அறிக்கையை புள்ளிவிபரத்துடன் வெளியிட்டுள்ளது.

அறிக்கை கூறுவதாவது:

'பல்கலைக்கழக உயர்கல்வித்துறைகளில் கிராமப்புற மாணவர்களுக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்பதும் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதும் மக்கள் அரசாங்கத்தின் கொள்கையாகும்: சுமார் 50 வீதமான கிராமப்புற மாணவர்கள் இவ்வுயர்கல்வித்துறைகளில் சேர்ந்து பயில வசதியளிக்க வேண்டுமென்பது இக்கொள்கையின் முக்கிய அம்சமாகும். இக்கொள்கையை இம்முறை ஓரளவாவது நடைமுறைப்படுத்தவே கல்விஅமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டார். எனினும் பல்கலைக்கழக அனுமதிகள் முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டுவிட்டதால் இக்கொள்கையை இம்முறை பூரணமாக அமுல்நடத்த முடியாமற் போயிற்று. எனினும் எதிர்காலத்தில் இக்கொள்கை அமுல் செய்யப்படும்:

''நாட்டின் உயர்கல்வி சுயமொழியில்தான் இருக்க வேண்டுமென்பது பலவருடங்களாகக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் குறிப்பாக வைத்தியம், பொறியியல், விஞ்ஞானம் போன்ற உயர் கல்வித்துறைகளில் துரதிர்ஷ்டவசமாக இதனை அமுல்நடத்துவதற்கு முயற்சிக்கப்படவில்லை. மக்கள் அரசு பதவி ஏற்றதும் தனது சிம்மாசனப் பிரசங்கத்தில் இதனைக்குறிப்பிட்டிருந்தது. அதற்கமைய கல்வி அமைச்சர் உயர் கல்வித்துறைகள் அனைத்தும் சுயபாஷையில் இருக்க வேண்டும் என உயர்கல்விப் பீட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

ஆங்கிலத்தில் உயர்கல்விப் போதனை நடைபெற்ற கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த இரத்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களில் சுமாரான புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குச் சிங்களமூலம் போதனை அளிக்கப்பட்டது. சிங்களமூலம் விஞ்ஞானக் கல்விக்கு நான்கு பல்கலைக்கழகங்களிலும் வசதிகள் இருந்தன. கிராமப்புறப் பாடசாலைகளில் தமிழ்மூலம் போதனைக்கு அதிக அளவிலான விஞ்ஞான ஆசிரியர்கள் இருந்தபோலும் சிங்கள ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு இருந்ததை மறுக்கமுடியாது. இவர்களை நாம் தயார் செய்யவேண்டியிருந்தது.

இந்தநான்கு பல்கலைக்கழகங்களிலும்கலைத்துறைப் பாடங்களைப் பயிலும் வசதி இருந்தது. கடந்த வருடம் தமிழ்மொழிமூலம் போதனைக்கு முதல்வருட மாணவர்கள் மட்டும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இப்படி சுயமொழிமூலம் போதனைக்கு அனுமதிக்கப்பட்ட சிங்கள மாணவர் தொகை 2,200 ஆகும். தமிழ் மாணவர் 275 பேராவர்.

பொறியியலில் பட்டப் படிப்புக்குப் பேராதனையில் மட்டுமே வசதியிருந்தது. இம்முறை அங்கு மாணவர்களின் அனுமதிபற்றிஆலோசிக்கப்பட்டபோது 100 தமிழ் மாணவரும், 58 சிங்கள மாணவரும், 8 முஸ்லிம்

(4-ம் பக்கம் பார்க்க)

# வெள்ளத்தில் மூழ்கியவர்கள் 40 பேராம்

கோட்டை, சனி

வலப்பனை — நுவரெலியா... நங்குராங்கேத்தை ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினுலும் நிலச்சரிவுகளினுலும் கஷ்டங்களுக்குள்ளாகியுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகள் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கின்றது.

ருகலைப் பகுதியில் வாவி ஒன்று உடைப்பெடுத்ததினுல் 40 பேர் அடித்துச் செல்லப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்திருக்கின்றது. மரணமானவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது அநுராமையிலுள்ள பகுதிகளும் வீடுகளும் நீருக்குள் மூழ்கியிருக்கின்றன

அடித்துச்செல்லப்பட்டவர்களின் சடலங்களைத் தேடுவதில் பொலிசாரும் அதிகாரிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்

— —

# 6 பேர் கொலை

புதுடில்லி, டிச. 12

கல்கத்தாவில் நேற்று இடம்பெற்ற சில அசம்பாவிதச்சம்பவங்களின் காரணமாக ஆறுபேர் கொலையுண்டார்கள் 3 பேர் எறிகுண்டுகளுக்கிரையாஞர்கள். 3 பேர் குத்திக்கொல்லப்பட்டனர்.

2-வது கிரிக்கெட் 'டெஸ்ட்'

# இங்: 397 ஆஸ்: 84—3

பேத், டிச 12

ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில், ஆஸ்திரேலியாவில் நடைபெறும் 2-வது கிரிக்கெட் 'டெஸ்ட்' போட்டியின் 2-வது நாளான இன்று இங்கிலாந்து எல்லா விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 397 ஓட்டங்களைப் பெற்றது.

ஆஸ்திரேலியா தனது முதலாது இன்னிங்ஸை பிற்பகல் தேனீர் இடைவேளையின் பின் ஆடத் தொடங்கி, இன்றைய ஆட்டம் முடிவடையும் போது தனது பலங்கொண்ட மூன்று விக்கெட்டுகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் லோரி ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஷக்புல்-05 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

20,000 மேற்பட்டமக்கள் இப் போட்டியை இன்று பார்வையிட்டனர்.

# 'காமராஜருடன் சேர்ந்துஉழைக்கப் போகிறேன்

—ராஜாஜி

சென்னை டிச.12

'நாட்டின் நிலைமை மோசமானதாக இருக்கிறது. இதனை யோசித்து காமராஜருடன் சேர்ந்து பாடுபடப் போகிறேன்' என்று சுதந்திராகட்சித்தலைவரும் முதுபெரும் அரசியல் வாதியுமான திரு ராஜாஜி தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பமான இருநாள் சுதந்திராக் கட்சி மாநாட்டுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டிருக்கிருர்.

சுங்க ஏலவிற்பனை

# சில்லறையாகவும் பெறலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சுங்க காரியாலயத்தில் இம்மாதம் 14-ம்திகதிகாலை நடைபெறவிருக்கும் ஏலவிற்பனையில் மணிக்கடைச் சாமான்கள், இந்திய பவுண்டன் பேனுக்கள், கண்ணுடி வளையல், முத்துமாலைபோன்ற பொருட்கள் சில்லறையாகவும் விற்கப்படும். பொதுமக்களின் நன்மை கருதியே குறிப்பிட்ட சில பொருட்களைச் சில்லறையாக விற்கத் தீர்மானித்ததாகச் சுங்க இலாகா உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்,

# திருமலை நகரசபை தலைவர் தோல்வி

## எம்.பி.யின் சகோதரர் வெற்றி

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலை நகரசபைக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் திருமலை நகரசபையின் தற்போதைய தலைவரும் நீண்டகால அங்கத்தவருமான டாக்டர் சிவானந்தன் தோல்வியடைந்தார். திருமலை ஆட்சிமன்றப் பிரதிநிதி திரு. பா. நேமிநாதனின் சகோதரர் திரு. பா. விஜயநாதன் முதலாம் வட்டாரத்திலிருந்து நகரசபை அங்கத்தவராக இம்முறையும் தெரிவுசெய்யப்பட்டிருக்கிருர். தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களே பெருமளவில் வெற்றியீட்டியிருப்பதாக கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார், தேர்தலில்வெற்றிபெற்ருேர் விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம் பா. விஜயநாதன்.

2-ம் வட்டாரம் ஏ.ஜி. ஏ. அல்பர்ட்.

3-ம் வட்டாரம் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா.

4-ம் வட்டாரம் எம். ஏ. எஸ். காதர்.

5-ம் வட்டாரம் எம். இராஜரத்தினம்.

6-ம் வட்டாரம் எஸ். சரணுனந்தசாமி.

7-ம் வட்டாரம் டாக்டர் வி. தம்பிஐயா.

8-ம் வட்டாரம் எஸ். எச். சோமபாலா,

9-ம் வட்டாரம் எஸ். கோபாலகிருஷ்ணன்.

10-ம் வட்டாரம் எம், முருகையா.

11-ம் வட்டாரம் கே.பி. ஆரியதாசா.

12-ம் வட்டாரம் எஸ். பட்ரிக்

— —

ஜகர்த்தா, டிச. 12

கிழக்கு இந்தோனேஷியாவில் சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக 82 பேர் மரணமாகியுள்ளனர் ஆயிரக்கணக்கானவர்கள் வீடுவாசல்களை இழந்து அவதிக்குள்ளாகியிருக்கிருர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாண அரசாங்க ஆஸ்பத்திரியில் சேவை செய்யும் வைத்தியருக்கு ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் வீடு தேவை. டாக்டர் ஞானசம்பந்தர், 13, பண்டிங் லேன், மட்டக்களப்பு என்னும் விலாசத்திற்கு எழுதவும். 2568

### விற்பனைக்கு

நன்முகத் திருத்தப்பட்ட 15 ஏக்கர் நடுத்தர வகுப்புக் காணி. பிரதான வீதிக்கு அண்மையில் புளியங்குளத்தில் உண்டு. ஞா. தேவராசா, 83/1, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 2560

### தேவை

பாரத்தனை பல நோக்குக் கூட்டுறவுப் பண்டகசாலைக்கு முகாமையாளர் தேவை. தகைமைகள்: 1. கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். 2. இரண்டு அண்மைக்கால நற்சாட்சிப்பத்திரங்கள் வேண்டும். பிணை 1. ரொக்கப் பிணை ஆயிரம் ரூபா (1000/-) 2. காணிப்பிணை இரண்டாயிரம் ரூபா (2000/-) சம்பளம்: முகாமையாளர், சிப்பந்தி இருவருக்கும் முதல் மூன்று மாதங்களுக்கும் நூறு ரூபா வீதம் வழங்கப்படும். மூன்று மாத முடிவில் சம்பளம் நூற்று இருபது ரூபாவாக உயர்த்தப்பட்டு சேவை நிரந்தரமாக்கப்படும். 15-12-70 செவ்வாய் பிற்பகல் 4 மணிக்குப் பிந்தாமல் விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: தா. அருளானந்தம், தலைவர், பாரத்தனை பல நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு. பொ. கந்தசாமி, காரியதரிசி. 2427

## சனசமூக நிலைய சமாசக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச பொதுச்சபைக் கூட்டம் இம்மாதம் 16ந் தேதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள், ஜெய்சங்கர் - பாரதி நடித்த

**காதல் பறவை**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள் எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா—அசோகன் நடித்த

**மாட்டுக்கார வேலன்**

கெப்பிட்டல் பிளாஸா மைலன் திரைகளிலும்

**யாழ். வெலிங்டன்**

திரையிலும்

தினசரி பி.ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30, போயா நாட்கள் காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்‌ஷனில் உருவாகி



மக்கள் திலகம்

எம். ஜி. ஆர்.


உதைபந்தாட்டம்

## யாழ். மாநகரசபை பதுளையை வென்றது!

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாநகரசபை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், பதுளை 'யூவீட்ஸ்' விளையாட்டுக்கழகத்துக்குமிடையில், யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மாநகரசபைக்கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகி பத்து நிமிடங்களுக்குள், யாழ். மாநகரசபைக் கோஷ்டி முதலாவது கோலைப்போட்டது. இடைவேளையின் போது இக் கோஷ்டி 4—0 கோல்களைப் போட்டு முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின்னும் மாநகர சபைக்கோஷ்டி மேலும் இரு கோல்களைப் போட்டது. பதுளைக்கோஷ்டி ஒரு கோலைமட்டுமே போட்டது. ஆட்டமுடிவில் யாழ். மாநகரசபைக்கோஷ்டி 6-1 கோல்களால் பதுளைக் கோஷ்டியைத் தோற்கடித்தது. யாழ். கோஷ்டியின் சார்பில் அகஸ்ரின், மணி, காந்தி ஆகியோர் முறையே 3, 2, 1, கோல்களைப் போட்டனர்.

இப்போட்டிக்கு திரு. பேரின்பநாயகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே. நி.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 13—12—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-30 கத்தோலிக்கநிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 திரைகானம்:

344 மீ. அன்ட் 49 மீ.

9-30 நாதஸ்வரம் — எஸ். எஸ் அப்புலிங்கம், 10-15 பாட்டு — எம். எஸ். வசந்தகுமாரி, 11-00 தாளவாத்தியக்கச்சேரி, 11-30 தேர்ந்தஇசை.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்,

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 சமூகமலர்ச்சி, 7-00 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 7-15 பாட்டு — கமலா பெரியதம்பி, 7-45 செய்திச்சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பரிசுபெற்ற நாடகம் — 'பிராயச்சித்தம்' 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.


**வெஸ்லிசினிமா**

மானிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30 ரஞ்சன் - அஞ்சலிதேவி நடித்த

**நீலமலைத்திருடன்**

**ஸ்ரீகாலிங்கன்**

இணுவில்

[illegible]


## இன்றைய பலன்

கார்த்திகை மீ 28-ந் திகதி (13-12-70)

மேஷம்- நிதி நிலையில் விரும்பத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. வணிகர்களாயின் அதிக ஆதாயத்தைப் பெறுவார்கள்.

ரிஷபம்- பல வழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

மிதுனம்- ஆத்திரப்படுவதால் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளுவீர்கள், எழுத்து மூலம் தொடர்பு கொள்வதை இன்று தவிர்த்துக்கொள்ளவும்.

கடகம்- தாம்பத்திய வாழ்வில் அன்பு தவழும், வாழ்க்கையில் தரமும் உயரும், காதலர்கள் வாழ்வில் கற்கண்டான தினம்.

சிம்மம்- கருத்து வேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும். புதிய இடத்திலிருந்து பகைதலை தூக்கலாம், மௌனமும் தெய்வ பக்தியும் நன்று.

கன்னி- கொள்வனவுகளில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். வணிகர்களுக்கு [illegible] சுமுகமான நிலை [illegible]படும்.

துலாம்- [illegible]

# "சமஷ்டியால் ஏற்படும் நன்மைகள் மக்கள் அரசாங்கத்தினால் கிடைக்கும்

# மாவட்டங்களுக்கு கூடிய அதிகாரங்கள் உண்டு"

## கருத்தரங்கில் வட்டு. எம்.பி.

(நமது நிருபர் கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம், ஞாயிறு

சமஷ்டியினால் ஏற்படக்கூடிய தீமைகளை விட்டு அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் மக்கள் அரசாங்கத்தினால் கிடைக்கப் போகின்றன. மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலிருந்த நிதிகூட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இந்த அரசாங்கத்தினால் பகிர்ந்து அளிக்கப்படவிருக்கிறது. பொருளாதாரதுறை மட்டுமன்றி பரிபாலனதுறையும் மாவட்ட ரீதியாக செயல்படப் போகிறது'

சர்வதேச கல்வி ஆண்டு விழாவையொட்டி யாழ். நகர மண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை யூனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவும் ஸ்ரீ லங்கா ஜாதிக குரு சங்க வடகிளையும் இணைந்து இணைந்து நடாத்திய இவ் விழாவில் சோஷலிஸத்தை நோக்கி முன்னேறும் ஒரு நாட்டுக்கான கல்வி அமைப்பு பற்றி கருத்தரங்கு நடைபெற்றது.

இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க. கைலாசபதி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் வட்டுக்கோட்டை எம் பி திரு. ஆ. தியாகராசா மேலும் கூறியதாவது:

தேசிய அரசாங்கத்தின் போது மாவட்டசபை கோரப்பட்டது. மக்கள் அரசாங்கம் தமிழர்கள் கேட்காமலே, அவர்களின் உரிமைகளை வழங்கி வருகிறது. மாவட்ட அபிவிருத்திசபை நிறுவப்படவிருக்கிறது. இதன் மூலம் கல்வி, கைத்தொழில், கமத்தொழில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அபிவிருத்தியடையப் போகிறது. தற்பொழுது கொழும்பில் உள்ள நிர்வாகம் பரவலாக்கப்பட்டு மாவட்டரீதியாக நடைபெறவிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலையை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. இந்த அரசாங்கம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போதிய அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் நிதிக்கஷ்டம் நமக்கு ஏற்படாது. தமிழர்


பிழைகளை விடுவதாகவும், தமிழர்களுக்கு பாதகமாக நடப்பதாகவும் சிலர் சொல்கிறார்கள். தேசிய அரசாங்கம் அதுவும் இரு தமிழ் கட்சிகளும் சேர்ந்து இயங்கியபோது பிழைகள் விடவில்லையா? தமிழர்களுக்கு பாதகமாக நடக்கவில்லையா? தேசிய அரசாங்கம் தமிழருக்கு செய்த அநீதிகளை, அதே அரசாங்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தவர்கள் தான் இன்று மக்கள் அரசாங்கம் பிழை விடுவதாக கூறுகிறார்கள், உலகில் எந்த அரசாங்கமும், நூற்றுக்கு நூறு வீதம் சரியாக நடக்காது. மகாத்மா காந்தியின் காங்கிரஸ் அரசாங்கம்கூட எத்தனையோ பிழைகளை விட்டுள்ளது: அதற்காக இந்திய மக்கள் அதனை வெறுத்துவிட்டார்களா? அரசாங்கம் பிழை விட்டால், எடுத்துக்கூறி திருத்த முயலவேண்டும். தமிழருக்கு அநீதி இழைத்தால், அதை சுட்டிக்காட்ட வேண்டும். அரசாங்கத்துடன் ஒத்துழைத்து அதை நீக்கமுயலவேண்டும் சும்மா எந்த நேரமும் அரசாங்கத்தை எதிர்த்துக்கொண்டிருந்தால் பிழை சரியாகிவிடுமா?

### சட்டரீதியான சலுகைகள்

இந்தியாவில், பல இன மக்கள் உண்டு. இருந்தும் சிறுபான்மைசமூகத்தவரை, பின் தங்கிய மக்களாக கருதி, கல்வி விஷயத்திலும், உத்தியோக விஷயத்திலும் சட்டரீதியாக அவர்களுக்கு சலுகையளிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ நாட்டின் சட்டங்களை அலசி ஆராய்ந்துதான் இந்திய கூட்டம் தயாரிக்கப்பட்டது இதே போன்று இலங்கையில் உருவாக்கப்படும் புதிய அரசியல் கூட்டத்தில் சிறுபான்மை சமூகத்தவருக்கு சட்டரீதியாக சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். அவர்கள் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்டவர்

தது. பின் அந்த இடத்தை ஹித்திபிடித்தது 15 மாநிலங்களின் பாஷைகளிலும் மத்திய அரசாங்க பரீட்சை எப்படி நடத்துவது என்ற பிரச்னை அரசாங்கத்திற்கு எழுந்தது. எல்லா மாநிலத்திற்கும், மத்திய அரசாங்க ஊழியரின் சேவை அவசியமாக இருந்தது. இப்படியான பாஷைபிரச்னை சமுகப் பிரச்னை இந்தியநாட்டிலும் இருந்தது. இப்பிரச்னை எப்படி அங்கு தீர்த்துவைக்கப்பட்டனவோ, அதே போன்று இந்நாட்டிலும் தீர்த்துவைக்கப்பட வேண்டும் அதற்கு தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கவேண்டும்.

பழையதலைவர்கள் கடைப்பிடித்துவந்த கொள்கைகள் வருங்கால சமுதாயத்தை முன்னேற்றாது. பழைய தலைவர்களை வாலிபர்கள் ஒதுக்கிவிடவேண்டும். பழைய தலைவர்களின் வழிகளை வாலிபர்கள் பின்பற்றக் கூடாது.



புத்தூர், சனி

அச்சுவேலிக்கிராமசபைத் தேர்தலில் 8-ம் வட்டார உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. பொ. சிவலிங்கம் 373 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார். இந்தவட்டாரத்தில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் இத்தனை அதிகப்படி வாக்கு

வாலிபர்கள் வருங்கால நிலைமைக்கேற்ப தங்கள் நிலைமைகளை மாற்றிக்கொள்ள வேண்டும்.

### புதிய தலைவர்கள் தோன்றவேண்டும்

வாலிபர்களிடையே புதிய தலைவர்கள் தோன்றவேண்டும். அவர்கள்தான் இனிமேல் நம் சமுதாயத்தை உருவாக்கவேண்டும் பழைய தலைவர்களால், கடந்தகாலத்தில் எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை. ஆதலால், அவர்களின் வழியை வாலிபர்கள் பின்பற்றக்கூடாது.

தற்பொழுது கிராமப்புற பாடசாலைகளுக்கும் பட்டணத்திலுள்ள பாடசாலைகளுக்கும் வித்தியாசம் உண்டு. இந்த வித்தியாசங்கள் நீக்கப்படவேண்டும் ஒருசோஷலிச சமுதாயத்தில் இப்படியான வித்தியாசங்கள் இருக்காது.

சோஷலிச சமுதாயத்தில் ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை கிடைக்கும். அப்புக்காத்து என்றால் அந்த தொழில் பார்த்துக் கொண்டே அரசியலில் குதிக்கலாம். ஆனால், ஆசிரியராக இருந்துகொண்டு அரசியல் பேசமுடியாது. இந்த நிலைமாறவேண்டும். ஆசிரியர்களின் இந்த நீண்டநாள் கோரிக்கையை மக்கள் அரசாங்கம் வழங்கியுள்ளது.

தமிழ் காங்கிரஸிலிருந்து கொண்டு நான் சோஷலிசம் பேசுவதை தெற்கிலுள்ள என் அரசியல் நண்பர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றார்கள். தமிழ் காங்கிரஸில் அங்கத்தவராக இருந்தாலும் பரவாயில்லை நான் ஒரு சோஷலிசவாதி தான். இன்று தங்களை சோஷலிசவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்களிலும் பார்க்க நான் முழு சோஷலிசவாதி.

ஒருவனை ஒருவன் சுரண்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



மக்கள் திலகம்

எம். ஜி. ஆர்.

ஜெயலலிதா

வாணிஶ்ரீ

முத்துராமன்

அசோகன், சோ,

ஓ. ஏ. கே. தேவர்

மற்றும்பலர் நடித்த

சத்யா மூவிஸ்



# கண்ணன் என் காதலன்

தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்



நடித்த

**நீலமலைத்திருடன்**

**ஶ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 10-00
சிவாஜி -- சரோஜாதேவி
நடித்த

**புதியபறவை**

**REGAL**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya days 4 shows
Sean Connery
in
THUNDER BALLS

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya days 4 shows
Michael Caine
Noel Coward
in
"THE ITALIAN JOB"
(Panavision-color)


லாம், மௌனமும் தெய்வ பக்தியும் நன்று.

கன்னி- கொள்வனவுகளில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. சுமுகமான நிலை தென்படும்.

துலாம்- நினைத்ததை முடிப்பதில் இன்று வெற்றி காண்பீர்கள், தொழில் துறையில் பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்- முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும், இருள் படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத் தரும்.

தனுசு- தாம்பத்திய வாழ்க்கையில் தனிச் சிறப்பு காணப்படும், பெரியவர்களின் உதவி உங்களுக்கு தப்பாமல் கிடைக்கும்.

மகரம்- அதிக அலைச்சல் உங்களுக்கு எரிச்சலைத் தரலாம், தொழில்துறையில் வருமானம் மிகவும் மட்டாகவே இருக்கும்.

கும்பம்- கவர்ச்சிகரமான தினம், சில விடயங்களில் நீங்கள் அதிக உணர்ச்சி வசப்படுவீர்கள், அடக்கம் நன்று.

மீனம்- அறவழியை நாடுவீர்கள், தெய்வச்சிந்தை மேலோங்கி நிற்கும், குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும்.

சோதிடக்கலாநிதி

**திருமலை க. வேலுப்பிள்ளை**

ங்கம் திட்டமிட்டு வருகிறது. இந்த அரசாங்கம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போதிய அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் நிதிநஷ்டம் நமக்கு ஏற்படாது. தமிழர் சிங்களவர் என்றோ, வடக்கு மாகாணம், தெற்கு மாகாணம் என்றோ எந்த விதபாகுபாடும் ஏற்படாது.

**வடக்கில் பல்கலைக்கழகம்**

வட மாகாணத்திற்குவிரைவில் பல்கலைக்கழகம் கிடைக்கப் போகிறது. இதற்கான நடவடிக்கைகளை, அரசாங்கம் எடுத்து வருகிறது தேசிய ரீதியாக தமிழ் மக்களுக்குபல நன்மைகள் கிடைக்கப் போகிறது.

மக்கள் அரசாங்கம் சில

இதே போன்று இலங்கையில் உருவாக்கப்படும் புதிய அரசியல் கூட்டத்தில் சிறுபான்மை சமூகத்தவருக்கு சட்டரீதியாக சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். அவர்கள் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்டவர்கள், கல்வி வசதியற்றவர்கள் பெரும்பாலானோர் ஏழைகள் அவர்களுக்கு சலுகை யளிக்கப்பட்டால் தான் முன்னேறுவார்கள்.

இந்தியாவில் ஆங்கிலம் அரசாங்க பாஷையாக இருந்

தேர்தலில் ... உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. பொ. சிவலிங்கம் 373 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார். இந்தவட்டாரத்தில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் இத்தனை அதிகப்படி வாக்குகளைப் பெற்றவர் இவர் ஒருவரே வடமாகாணக் கிராமசபைகளின் தேர்தல்களிலும் இவர் ஒருவரே இதுவரை இவ்வளவு அதிகப்படிவாக்குகளைப் பெற்றுரெனக்கூறப்படுகிறது.

இருந்தாலும் பரவாயில்லை நான் ஒரு சோஷலிசவாதி தான். இன்று தங்களை சோஷலிசவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்களிலும் பார்க்க நான் முழு சோஷலிசவாதி.

ஒருவனை ஒருவன் சுரண்டாதநிலைமை. அடிமையாக்காதநிலைமை. சோஷலிச சமுதாயத்தில் உண்டு. எல்லாரும், சுபீட்சமாக, சுதந்திரமாக, பாகுபாடின்றி அச் சமுதாயத்தில் வாழமுடி

(4-ம் பக்கம் பார்க்க)


# யாழ். வின்ஸர் வெண்திரையில்

இப்பொழுது திரையிடப்படுகிறது! தினசரி 4 காட்சிகள்



★ ராஜன்
★ ரவிச்சந்திரன்
★ லட்சுமி
★ நிர்மலா
★ நாகேஷ்
★ கண்ணையா
★ ஆர். வாசு
★ புஸ்பமாலா

நடித்த

# ஏன்?



டைரக்ஷன்:
ராமண்ணா



## விற்பனையாகின்றது

## 'ஈழநாடு' தினக்குறிப்பு

# 1971

முற்றிலும் புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டு விசேஷமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

60 பக்கங்கள் கொண்ட தகவல்கள்

★ அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைகள்
★ போயா விடுமுறைகள்
★ பாடசாலை தவணை விடுமுறைகள்
★ உலக - இலங்கை புவியியல், குடியியல், சரித்திரம் சம்பந்தமான குறிப்புகள்
★ தபால் தந்தி விகிதங்கள்
★ பஸ், புகையிரத, விமான சேவை நேர அட்டவணை
★ கிரகங்களின் அட்டவணை

[ இன்னும் பல குறிப்புகள் ]

விலை: ஒன்று 1 ரூ. 50 சதம்
வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

'ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)
த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபுக்களை கொடுமைப் படுத்துவதை இஸ்ரேல் நிறுத்த வேண்டும்

## ஐ. நா. பொதுச்சபையின் சமூகவியல் கமிட்டி வலியுறுத்து

நியூயோர்க் டிச.12

இஸ்ரேல் வசமிருக்கும் அரபுப் பகுதிகளில் வாழும் அரபுமக்களை கோஷ்டி கோஷ்டியாக இஸ்ரேலியர் தண்டனைக்குள்ளாக்குவதையும்கொடுமைப்படுத்துவதையும் உடனே நிறுத்தும்படி ஐ. நா. மகாசபையின் சமூகவியல் கமிட்டி வலியுறுத்தியிருக்கின்றது.

இஸ்ரேல் பகுதிகளில் வாழும் அரபுமக்களின் நிலைமைகளைப்பற்றிஆராய்வதற்காகக்குழுவொன்றைஅனுப்பி ஆராய வேண்டுமென்றும் கமிட்டி கேட்டுக்கொண்டது

இஸ்ரேலிய எல்லைகளில் வாழும் அரபுமக்களைக் கொடுமைப்படுத்துகிருர்கள் என்றகுற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்துவிட்டது.

இஸ்ரேலைக்கண்டிக்கும்தீர்மானத்தை அப்கானிஸ்தான், கினி, மொரிட்டானியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தாக்கல் செய்திருந்தன,

### அமெரிக்காவில் தயான்

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர்ஜெனரல்மோஷே தயான் அமெரிக்காவுக்கு விஜயம்செய்துள்ளார். அவர் நேற்று அதிபர் நிக்ஸனை சந்தித்துப்பேசினுர். இஸ்ரேலுக்கு அதிக ராணுவ உதவிகளைத் தரும்படி தயான் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்றுகருதப்படுகின்றது.

மேற்காஸியாவில் அமைதியேற்படுத்துவதற்கு மீண்டும் டாக்டர் ஜாரிங் தலைமையிலான அமைதிப்பேச்சுக்களை ஆரம்பிப்பதுபற்றி அதிபர் நிக்ஸன் தயானுடன் பேசியிருக்கவேண்டுமென்று கருதப்படுகின்றது.

மேற்காஸிய அமைதிக்கான ஐ.நா. விசேஷத் தூதுவர் தற்பொழுது மாஸ்கோவில் இருக்கிறுர். அவர் ஜனவரி முற்பகுதியில் ஐ நா தலைமைநிலையத்திற்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஜோர்டானில் மீண்டும் மோதல்

ஜோர்டான் அரசாங்கப் படைகளுக்கும் அரபுக் கொமாண்டோக்களுக்குமிடையில் மீண்டும் மோதல் ஆரம்பமாகியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன, அரசாங்கப்படைகளின் நிலைகள் மீது கொரில்லாக்கள் ரொக்கட்டுகளாலும் எறி ஆயுதங்களாலும் தாக்கிஞர்களாம். சிறுபாலம் ஒன்றையும் கொரில்லாக்கள் உடைத்தெறிந்திருக்கிருர்கள்,

— —

### கலையரசுக்கு பாராட்டு விழா

கொழும்பு, சனி

சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற கலையரசு திரு. கே. சொர்ணலிங்கத்தைப் பாராட்டி அகில இலங்கை இளம் நடிகர் சங்கம் பாராட்டுவிழா ஒன்றை நடத்தினர்:

கொழும்பு ஹோட்டல் தப்ரபேன் மூன்ருவது மாடியில் தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தலைமையில் நடைபெற்ற விழாவை வி. எஸ். ரி. பீலிம்ஸ் அதிபர் திரு. துரைராசா ஆரம்பித்து வைத்தார். வித்தியாரத்தினம் சோ. நடராசா, திரு. இ. இரத்தினம், திரு. க. நவசோதி இதில் சொற்பொழிவாற்றினர்.

— —

### அபின் பிடிபட்டது

இமையாணன், சனி

வல்வெட்டித்துறையில் வீடொன்றில் அபின் கைப்பற்றப்பட்டுள்ளது. திருவில் ஒழுங்கையில்வைத்து சுமார் 42 ஆயிரம்ருபாய் பெறுமதியான 42 ருத்தல் அபினை வல்வெட்டித்துறைப் பொலிசார் கைப்பற்றினர். இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்து அபினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### இம்மாதப் பிற்பகுதியில்

## தமிழ் நாட்டில் இசை விழாக்கள் ஆரம்பமாகின்றன

சென்னை, டிச.12

தமிழ்நாட்டில் பலஇசைச் சங்கங்களின் ஆதரவின் கீழ் வருடாவருடம்நடைபெற்றுவரும் இசைவிழா இம்முறையும் இம்மாத பிற்பகுதியில் ஆரம்பமாகிறது. மியூசிக அக்கடமியின் 44-வது மகாநாடும் இசைவிழாவும் இம்மாதம் 19ந் திகதி அக்கடமியின்மண்டபத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து பதின்நான்குநாட்களுக்கு நடைபெறும். சங்கீத விதூஷி ஸ்ரீமதி டி. கே.பட்டம்மாள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவை கேரள கவர்னர் ஸ்ரீ. வி. விஸ்வநாதன் ஆரம்பித்துவைப்பார்.

19-ந்திகதி குமாரி அனிதா ரத்தினம் குமாரி பிரிதா ரத்தினம் ஆகியோரின் பரத நாட்டியத்துடன் ஆரம்பமாகும் இவ்விழா அடுத்த வருடம் தைமாதம் 1ந்திகதி ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் பரதநாட்டியத்துடன் முடிவடையும்.

1 1-1971ல் 'சதஸ்' நிகழ்ச்சி நடைபெறும். இதற்கு மைசூர் கவர்னர் ஸ்ரீ தர்மவீரா தலைமைவகிப்பார்.

இவ்இசைவிழா மற்ருரு சங்கமாகிவதமிழ்இசைச்சங்கத்தின் ஆதரவின்கீழ் தமிழ் இசைச் சங்கத்தின் 28-வது வருடாந்தவிழாவாக இம்மாதம் 23ந் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு நடைபெறும். ராஜா அண்ணுமலை மண்டபத்தில் நடைபெறும்இவ்விழாவிற்கு சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி தலைமைவகிப்பார். அன்று சீர்காழி எம். எஸ். கோபாலகிருஷ்ண[illegible] கச்சேரியும் ஆரம்பமாகும். இவ்விசைவிழா அடுத்த வருடம் தைமாதம் 3ம் திகதி மது[illegible] சேதுராமன் [illegible] பொன்னுச்சாமி ஆகியோரின் [illegible] இசையுடன் [illegible]

யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுள்ள சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இந்த தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவின்கீழ் இம்மாதம் 27 ந் திகதி இரவு 9-30மணிக்கு 'இசையும் இறைவனும்' என்னும் பொருள்பற்றி காலட்சேபம் நிகழ்த்துவார்.

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தின் ஆதரவின்கீழ் 38-வது தென்இந்திய இசை மகாநாடும்,விழாவும் வாணிமகால் மண்டபத்தில் இம்மாதம் 23ந்திகதி ஆரம்பமாகி பன்னிரண்டு நாட்களுக்கு நடைபெறும்.

இவ்விழாவைமைசூர்கவர்னர் தர்மவீரா ஆரம்பித்து வைப்பார். குமாரி ராதிகாவின் பரதநாட்டியத்துடன் ஆரம்பமாகும் இவ்விழா அடுத்தவருடம் தை மாதம் 3ம் திகதியுடன் முடிவடையும். (இமை நி.)

— —

### முன்னுள் அமைச்சருக்கு தண்டனை

சென்னை, டிச. 12

தமிழ்நாடு முன்னுள் காங்கிரஸ் அமைச்சர் திருமதி லூர்தம்மாள் சைமனுக்கு லஞ்சம் வாங்கியதான குற்றச்சாட்டின்மீது தண்டனை விதிக்கப்பட்டது.

ஆசிரியர் ஒருவருக்கு இடமாற்றம் வாங்கிக்கொடுப்பதற்கென பிரான்ஸிஸ் என்ற பாதிரியாரிடம் 100 ருபா லஞ்சம் வாங்கியதான குற்றச்சாட்டின்மீது அபராதமாக 2ஆயிரம் ருபா செலுத்தும்படியும், இல்லையெனில் [illegible]றைத் தண்டனை [illegible]க்கவேண்டும் என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

### தமிழ் நாடு மொழிக் கொள்கை

## எதிர்க்கட்சித்தலைவர்களுடன் முதலமைச்சர் ஆலோசனை

சென்னை, டிச. 12

தமிழ்நாடு அரசின் மொழிக் கொள்கையின் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து ஆலோசிப்பதற்கென முதலமைச்சர் திரு. மு. கருணுநிதி சகல கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கிருர்.

அண்மையில் தமிழ்நாடு செயலகத்தின் முன் மாணவர் ஆர்ப்பாட்டம் செய்ததின் காரணமாக மோதல்களும் அமைதியின்மையும் ஏற்பட்டது.

நிஜலிங்கப்பா ஆதரவு இளைஞர்கள் காங்கிரஸ் இன்று வேலைநிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

நேற்றுச் சென்னையில் அசம்பாவிதம் எதுவும் ஏற்படவில்லை.

## கினி நாட்டுக்கு உதவ ஆபிரிக்க நாடுகள் முடிவு

லேகோஸ், டிச 12

கினிநாட்டின்மீது போர்த்துக்கல் நடத்திய தாக்குதலில் உடந்தையாக இருந்தவர்கள் அனைவரையும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று அமெரிக்க நாடுகளின் ஒற்றுமை ஸ்தாபனம் தெரிவித்திருக்கின்றது.

இந்தத் தாக்குதலின் காரணமாக பாதிக்கப்பட்ட கினிக்கு பொருளாதார, மற்றும் தொழில்நுட்ப உதவிகளைக் கொடுத்துதவ நிதியொன்றை ஆரம்பிப்பதென்றும் கொரில்லா நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதென்றும் இந்த நாடுகள் முடிவு செய்துள்ளன. போர்த்துகலுக்கு நேட்டோ உதவியளிக்க ஒற்றுமைஸ்தாபனம் கண்டித்துள்ளது.

### 'பழிவாங்கும் நோக்கமில்லை'

— வர்த்தக அமைச்சர்

கோட்டை, சனி

''நாங்கள் ஒருவரையும் பழிவாங்க நினைக்கவில்லை மக்களின் விருப்பங்களையே அவர்களது நலனை முன்னிட்டு நிறைவேற்ற முனைகிறேம் என்று பத்திரிகையாளர் மகாநாட்டில்பேசிய உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் நாங்கள் பொருளாதார அமைப்பை மாற்ற முனைகிறேம் கிடைக்கக் கூடிய மிகக் குறைந்த அன்னிய செலாவணியை மக்களின் நலனுக்குப்பயன்படுத்த உள்ளோம்'' என்ருர்

## ராஜதந்திரிகளைக்கடத்துவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

### 17 நாடுகள் தீர்மானம்

லண்டன், டிசம்பர் 12

ராஜதந்திரிகள் கடத்தப்படுவதை 17 மேற்கு ஐரோப்பா நாடுகள் கடுமையாக கண்டித்திருக்கின்றன.

ராஜதந்திரிகள் கடத்தப்படுவது சம்பந்தமாக 17 நாடுகளைச்சேர்ந் வெளிநாட்டமைச்சர்கள் சந்தித்துப் பேசினுர்கள்.

ராஜதந்திரிகளைக் கடத்தும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இதில் எல்லா நாடுகளும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

சமீபகாலமாக நேற்று ஐரோப்பிய நாடுகளில்வெளிநாட்டு ராஜதந்திரிகள் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்படுவது சம்பந்தமாக இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

பிரேஸில் நாட்டில் அண்மையில் கடத்திச் செல்லப்பட்ட சுவிஸ்நாட்டுத் தூதுவரை விடுவிப்பதற்கு தீவிரவாதிகள் விடுத்திருந்த நிபந்தனைகளை பிரேஸில் அரசாங்கம் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை, தங்களின் சகாக்களை விடுவிக்க வேண்டுமென்றும் தீவிரவாதிகள் இருக்கும் இடங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதைக் கைவிடவேண்டுமென்றும் அவர்கள் நிபந்தனைகள் விதித்திருந்தார்கள் இதுவரை பிரேஸில் நாட்டுப் பொலிசார் சுமார் 1300 பேரைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்திருக்கிருர்கள்.

### தோட்டங்களைக் கைப்பற்றுவது

## அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கை

### இ. தொ. கா. கண்டனம்

கொழும்பு, சனி

இந்தியர்கள் வசமிருக்கும் தோட்ட நிலங்களைக் கைப்பற்றி கண்டிய விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பது சம்பந்தமாக விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பகடுவ ஆட்சிமன்றத்தில் தெரிவித்திருந்த கருத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடுமையாகக் கண்டித்து ஓர் அறிக்கையிருந்தார்.

அமைச்சரின் புதிய நடவடிக்கைகளின் காரணமாக தோட்டங்களிலேயேபிறந்து வளர்ந்தவர்கள் வெளியேற்றப்படாதென்றும் இது விஷயமாகத் தோட்டப் பகுதிகளில் அமைதியின்மை இருந்து வருவதாகவும் மாத்திரமே திரு. தொண்டமான் குறிப்பிட்டிருந்ததாகவும் மட்டுமே அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (சி பி ஏ)

## அமைச்சர் இலங்கரத்தின 26-ல் யாழ். வருகிருர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிப்பதற்கென முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி சகல கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அண்மையில் தமிழ்நாடு செயலகத்தின் முன் மாண

கிரஸ் இன்று வேலைநிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

நேற்றுச் சென்னையில் அசம்பாவிதம் எதுவும் ஏற்படவில்லை.

வல்வெட்டித்துறைப் பொலிசார் கைப்பற்றினர். இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்து அபினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டு பிணயில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கச்சேரியும் ஆரம்பமாகும். இவ்விசைவிழா அடுத்த வருடம் தைமாதம் 3ம் திகதி மதுரை எம். பி. என். சேதுராமன், எம். பி. என். பொன்னுச்சாமி ஆகியோரின் நாதஸ்வர இசையுடன் முடிவடையும்.

றச்சாட்டின்மீது அபராதமாக 2 ஆயிரம் ரூபா செலுத்தும்படியும், இல்லையெனில் 6 மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

## கான்ஸ்டபிள் கொலைவழக்கு: 4 எதிரிகளும் குற்றவாளிகள்

காலி, சனி

பத்தேகமைப் பொலிஸ் கான்ஸ்டபிள் கொலைவழக்கில் நான்கு எதிரிகளும் கைமேசகக் கொலைக் குற்றவாளிகள் என்று ஜூரிமார் பெரும்பான்மைத் தீர்ப்பு அளித்தனர்.

இந்த வழக்கு ஆங்கிலம் பேசும் ஜூரர்களின் முன்னர் நீதியரசர் ஏ. பி. எஸ். சிறிமானேயால் விசாரணை செய்யப்பட்டுவந்தது.

இந்த வழக்கில் ஹூபேர்ட் டன்னிஸ் ஜோப்ஸுட் என்ற பொலிஸ் கான்ஸ்டபிளைக் கொலைசெய்ததாக தர்மதாச சூரியாராய்ச்சி, கே. எச். அமரதாஸ, எச். ஜி. வில்சன், பீட்டர் கனியங்கொட ஆகியவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது' கே. கே. தனபால என்ற சாரதியைக் கொலை செய்ய எத்தனித்ததாகவும் இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

முதல் குற்றத்துக்கு ஒவ்வொருவருக்கும் ஆறு ஆண்டுக் கடூழியச் சிறையும், இரண்டாவது குற்றத்துக்கு நான்கு ஆண்டுக் கடூழியச் சிறையும் விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனைகள் ஒன்றன்பின் ஒன்ருக அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## தனியார் வைத்தியசாலைகள் கட்டுப்படுத்த புதிய சட்டம்!

கொழும்பு, சனி

இலங்கையிலுள்ள எல்லாத் தனியார் வைத்தியசாலைகளையும், மருத்துவவிடுதிகளையும் கட்டுப்படுத்துவதற்கு விரைவில் சுகாதார அமைச்சு சட்டம் கொண்டுவரவிருக்கிறது. இச்சட்டம் டாக்டர்கள் தனியார் வைத்தியம் செய்வதையும் ஒழுங்குபடுத்திக் கண்காணிப்பதற்கு வசதியளிக்குமெனக் கருதப்படுகிறது. மருத்துவ இல்லங்கள் அதிக பணம் அறவிடுவதாகவும். தனியார் வைத்தியசாலைகள் மருந்துகளுக்கு அதிக பணம் அறவிடுவதாகவும் பொது மக்கள் அரசாங்கத்திற்கு முறையிட்டதின் பேரில் இந்நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவிருக்கிறது.

(சி. பி. ஏ.)

## பேரனும் பேத்தியும் படுக்கையில் வைத்துக்கொலை

காலி, சனி

படுக்கையில் வைத்து பெண்மணி ஒருவரும் அவரது 8வயதுநிரம்பிய பேரன் ஒருவரும் கொலைசெய்யப்பட்டுள்ள சம்பவம் காலியைச்சேர்ந்த அக்மீமனைப் பொலிஸ்பகுதியில் நடைபெற்றுள்ளது.

இகலவெல்வல என்னுமிடத்தைச்சேர்ந்த எல். ஜி. கறலேன் (வயது 60), டபிள்யூ எம். சிறில் (வயது8) ஆகிய இருவருமே கொலைசெய்யப்பட்டவர்களாவர். இறந்தவரின் மகனான ஏ. எல், வில்லியம் (வயது40) தமதுசாட்சியத்தில், தமது தாயார் 1000ரூபா பணம் வைத்திருந்ததாகவும், 9-ந் திகதி காலை தாயாருடைய வீட்டுக்குச் சென்றிருந்தபோது, தாயார் இரத்தவெள்ளத்தில் இறந்துகிடக்கக்காணப்பட்டதாகவும், தனது மருமகன் இன்னுமொரு கட்டிலில் இறந்துகிடந்ததாகவும் கூறினர். வீட்டிலிருந்தநெல் மூடைகள் குலைக்கப்பட்டு தலையணைகள் கிழிக்கப்பட்டிருந்ததாகவும் இதுபற்றிஉடனடியாக பொலிசாருக்கு அறிவித்ததாகவும் அவர் மேலும் சொன்னர்.

பதில் மாஜிஸ்டிரேட் திரு. ரெக்ஸ் விக்கிரமசிங்க ஸ்தல விசாரணை நடத்தினர்.

சந்தேக நபரான ஏ. எல். சாமி என்பவர் இதுசம்பந்தமாக இம்மாதம் 15ந் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். மேலும் நால்வரைப் பொலிசார் தேடி வருகின்றனர்.


## காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஒய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்ருகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்ருகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிருர்கள்.

தலைவலி, நோவு; சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

P.0447


சம்பந்தமாக ... அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பகடுவ ஆட்சிமன்றத்தில் தெரிவித்திருந்த கருத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடுமையாகக் கண்டித்து ஓர் அறிக்கையை விடுத்திருக்கின்றது.

இந்த நடவடிக்கை அடிப்படை உரிமைகளை மீறுவதாகும். இலங்கையரான இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளர்களைக் கஷ்டப்படுத்தி இன்னெரு சமூகத்தின் நலன்களைப் பாதுகாக்க எடுக்கப்படும் இந்நடவடிக்கை; அரசாங்கம் பெரிதாகப் பேசிக்கொள்ளும் சோஷலிஸத்தின் ஆணிவேரையே தகர்ப்பதாகும் என்று இலங்கை தொழிலாளா காங்கிரஸ் தெரிவித்திருக்கின்றது.

கண்டிய பகுதிகளில்உள்ள அனேகமான தோட்டங்கள் அப்பகுதி மக்களுக்குரியவை பிரிட்டிஷ்காரர்களால் இவை அபகரிக்கப்பட்டன. இந்த அநீதியைச் சரிசெய்யப்போவதாகவும் பயன்படுத்தப்படாமல்கிடக்கும் தோட்ட நிலங்களைக் கைப்பற்றி நிலமில்லாத கண்டிய விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப் போவதாகவும் திரு. கொப்பேகடுவா கடந்த வாரம் ஆட்சிமன்றத்தில் கூறியிருந்தார். அவர் இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் தலைவரையும் ஆட்சிமன்றத்தில் கண்டித்தார். அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தொண்டமான் சொல்லித்தர முயற்சிக்கிருர் என்றும் தொண்டமான் சகாப்தம் முடிந்துவிட்டதென்றும் திரு. கொப்பேகடுவா கூறி

... விஷயமாகத் தோட்டப் ...

(சி பி ஏ)

## அமைச்சர் இலங்கரத்தின 26-ல் யாழ். வருகிருர்

யாழ்ப்பாணம், சனி

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி இலங்கரத்தின இம்மாதம் 26-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிருர். வடபகுதி கூட்டுறவு சம்மேளனக் காரியாலயத்தில் அன்று காலை நடைபெறவிருக்கும் வடமாகாண கூட்டுறவுச் சமாசங்களின் மகாநாட்டில் கலந்துகொள்ளுவதற்காகவே அமைச்சர் யாழ். வருகிருர்.

26-ம் திகதிகாலை ரயிலில் யாழ்ப்பாணம் வந்துசேரவிருக்கும் அமைச்சர் இலங்கரத்ன காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்வார். இதன் பின்னர் வலிமேற்கு ப. நோ. கூ. சங்கத்தில் மின்தறியை திறந்துவைப்பார். இரவு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கலை நிகழ்ச்சிகளிலும் அமைச்சர் கலந்து கலந்து கொள்ளுவார். மறுநாட்காலை அவர் கொழும்பு திரும்புவார்.

### தேயிலை ஏற்றுமதி:

## கூட்டு முயற்சிகள் இனி இருக்காதாம்

கொழும்பு, வெள்ளி

தேயிலை விற்பனை அபிவிருத்தி விஷயத்தில் இலங்கை இனிமேல் தனித்துவமாகவே அதிக கவனம் செலுத்தும். தோட்டத் தொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டொரிக் டி சூஸா இதைத்தெரிவித்தார்.

தேயிலைப் பாவனையாளர்கள் தேயிலையின் தரத்தைப் பற்றியே கவனம் செலுத்தும்படி செய்யவேண்டும். தரம்மிகுந்த தேயிலைக்கு இலங்கை பேர்போயிருப்பது தெரிந்ததே. இப்பொழுது இருக்கும் ஏற்பாட்டின்படி தேயிலையின் தரம்குறித்து அதிககவனம் செலுத்தப்படுவதில்லை என்று அவர் சொன்னர்.

புதுடில்லியில் நடைபெற்ற தேயிலை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் திரு. சூஸா, அமைச்சர் கொல்வின் ஆர். டி சில்வாவுடன் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பியுள்ளார்.

இப்போதிருப்பது போல் தேயிலை விற்பனை விஷயத்தில் கூட்டு முயற்சிகளைவிட தனித்துவமாகவே இலங்கை கவனம் செலுத்தும் என்று கூறிய திரு. சூஸா தேயிலை விற்பனையை அபிவிருத்தி செய்வதற்கும் சந்தைப்படுத்துவதற்கும் என விரைவில் தேயிலை கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்படவிருப்பதாகவும் நிருபர்களிடம் கூறினர்.

—சி. பி. ஏ.

### சந்திரத் தரையில்

## லூனு கோட் மீண்டும் இயங்குகின்றது

மாஸ்கோ, டிச. 12

சோவியத்யூனியன் சந்திரத் தரையில் இறக்கியுள்ள லூனு கோட் என்னும் வாகனம் இன்று அதிக வேகத்துடன் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டது.

சூரிய ஒளியின் உதவி கொண்டு இயங்கும் பாட்டரி அமைப்புக்களைக் கொண்ட இந்தயந்திரம் சந்திரனில் இரவுகாலம் ஆரம்பித்தவுடன் செயல்படாமல் முடங்கிக் கிடந்தது. சந்திரனில் இரவு, பூமியில் 14 நாட்களுக்கு சமமாகும். இப்பொழுது மீண்டும் சந்திரனில் பகல் வந்துவிட்டதால் லூனுகோட் இயங்கத் தொடங்கியுள்ளது. லூனுகோட் நேற்று மீண்டும் தன் பணிகளைச் செய்யத் தொடங்கியது. அதனை விஞ்ஞானிகள் பூமியில் இருந்தபடியே இயக்குகிருர்கள். சந்திரனில்மேற்பரப்பில் இதுபல்வேறுவிதமான சோதனைகளை நடத்தவிருக்கின்றது. சந்திரனின் மேற்பரப்பில் பலமீட்டர் தூரம் இது நகர்ந்துள்ளது. இன்னும் வேகமாக இன்று முதல் அது பிரயாணம் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆலோசனைக் குழு

அம்பன், சனி

திருக்கோணமலைக் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் ஆலோசனைக் குழுவிற்கான தேர்தல் அண்மையில் நடைபெற்றது. இக்குழு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: திருவாளர்கள் ஏ. விபுலசேன தலைவர், ரி. ஆர். சுசீலன் உப-தலைவர். வி தர்மலிங்கம், பி. விக்கிரமநாயகம், எஸ். ஆறுமுகம் இணைச் செயலாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அவாவை எதிர்த்து அவாவின்மையை வளர்க்காததையும், கட்டுக்கு வழிகாட்டுவனவும், விடுபடுவதற்கு வழியாகாதவையும் உலக உடைமைகளைப் பெருக்க உதவுவனவும், சுருக்க உதவாதனவும் உலோபத்திற்கன்றி வைராக்கியத்திற்குப் பயன்படாதனவும், திருப்தியை விளையாதன்றி அதிருப்தியையும் சுறுசுறுப்பையும் விட்டு சோம்பலையும் கொள்வது தர்மமாகா. — புத்தர்.

**ஈழநாடு**

Eelanadu Daily

Telegrams "EELANADU" Jaffna

Post Box 49, Jaffna. Telephone 889

ஸாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 28-ந் திகதி (13-12-70)

## கூட்டுறவு ஊழல்கள் ஒழிப்புத்திட்டம்

கூட்டுறவுச் சங்கக்கடைகள், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கடைகள், சலுசலா கடைகள் ஆகியவைகளில் ஊழல்களைக் களையவும், பாவனைப்பொருள்கள் சீரான முறையில் மக்களுக்கு விநியோகிக்கப்படுவதை உத்தரவாதப்படுத்தவும், தொகுதிதோறும் உத்தியோகப்பற்றற்ற பரிசோதகர்கள் (இன்ஸ்பெக்டர்கள்) நியமிக்கப்படவிருக்கின்றனர். தொகுதி ஆட்சிமன்றப் பிரதிநிதியும் உத்தியோகப்பற்றற்ற பரிசோதகராக இருப்பதுடன் அந்தப் பிரதிநிதி தான் தமது தொகுதியில் இருந்து ஏழு பேரைத் தெரிவுசெய்வதற்குப் பெயர்களைச் சிபார்சுசெய்வார். உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் இத்திட்டம் 1971ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து செயல்படுத்தப்படவிருக்கிறது. பாவனைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கவும் ஊழல்களை ஒழிக்கவும் விலைக்கட்டுப்பாட்டைச் சரியாகப் பின்பற்றவும் இவ்வித உத்தியோகப் பற்றற்ற இன்ஸ்பெக்டர்கள் தொகுதிதோறும் நியமிக்கப்படவேண்டுமென உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் ஆட்சிமன்ற ஆலோசனைக் குழு தெரிவித்த ஆலோசனையின்மீது அமைச்சு இத்திட்டத்தைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கவும் அமைச்சு இந்தத் திட்டத்தை கொண்டுவருகிறது. இந்த நல்ல நோக்கத்துடன் இத் திட்டம் என்றாலென்ன வேறு எந்தத் திட்டம் என்றாலென்ன மக்கள் நிச்சயம் அரசாங்கம் மட்டுமல்ல இதற்கு முன்னைய அரசாங்கங்களும் ஏன் நாடு விடுதலை பெற்ற நாளிலிருந்து என்று கூடச் சொல்லலாம். இவ்வித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்திருக்கிறது என்று சொல்லலாம். தனியார்துறையினர் கொள்ளை லாபம் அடிப்பதற்காக எதையெதையோ செய்கிறார்கள் என்று கூட்டுறவு இயக்கத்தை நம்பினால் அங்கும் சில பெருச்சாளிகள் புகுந்து கொண்டு மேல் அறுப்பு வேலை செய்துகொழுக்கின்றனர். அரசாங்க ஆதரவிலான கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம், சலுசல, லக்சல போன்ற நிறுவனங்களிலும் இதே கதை. இதற்குக் கீழ்மட்ட அரசாங்க ஊழியர்களின் உத்தரவாதம் இல்லாமலில்லை. எனவே விலைவாசி குறையவும், அத்தியாவசியப் பொருள்கள் மக்களுக்குத் தட்டுப்பாடின்றிக் கிடைக்கவும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயன்தராமற்போனதால் புதிய முயற்சியைப் பரீட்சார்த்தமாகவாவது மேற்கொள்ளவேண்டியது அவசியம் தான். இந்த வகையில் தொகுதிகள் தோறும் அந்தத் தொகுதிப் பிரதிநிதியுடன் மற்றும் ஏழு பேரைத் தெரிவு செய்து ஊழல்களைக் களைந்து கட்டுப்பாடு விலைக்குப் பொருள்கள் கிடைக்கவும், பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமலும் கவனித்துக் கொள்ள மேற்கொள்ளப் படவிருக்கும் திட்டம் வரவேற்கக்கூடியதும், பாராட்டக்கூடியதுமாகும்.

ஆனாலும் தொகுதிப் பிரதிநிதிகள் இந்த உத்தியோகப் பற்றற்ற பரிசோதகர்களை நியமிப்பதற்குக் கொடுக்கும் சிபார்சில் தேர்வுசெய்வோர் விஷயத்தில் கட்சி அரசியலை

## சிங்கள மக்கள் அளித்தது தீர்ப்பானல்

# தமிழர் அளித்த தீர்ப்பையும் ஏற்றுக வேண்டும்

**இலங்கையின் புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தயாரித்து அரசியலமைப்பு அமைச்சிடம் சமர்ப்பித்துள்ள நகல் திட்டம் ஈழநாட்டில் விபரமாக வெளிவருகிறது. அரசியலமைப்பின் மீதான பொது நிலையறிக்கை இன்று வெளிவருகிறது. முழு அறிக்கையும் தொடர்ந்து வெளிவரும். இந்த அறிக்கையை தமிழரசுக் கட்சியின் சார்பில் உடுவில் பிரதிநிதி திரு. வி தர்மலிங்கம் அரசியல் விவகார அமைச்சிடம் சமர்ப்பித்தார்.**

நினைவுக் கெட்டாத காலத்திலிருந்து இலங்கையானது சிங்களர்களினதும் தமிழர்களினதும் தாயகமாக விளங்கி வருகின்றது. இராவணன், விஜயன் என்போர்பற்றிய கர்ணபரம்பரைக் கதைகளை அல்லது வேறு வரலாற்றுக் குறிப்புகளைச் சான்றுகாட்டி யார் இந்நாட்டில் முதன் முதலில் வசித்தார்கள் என்பதுபற்றிய விவாதம் எதிலும் ஈடுபடுவது பயனற்றதாகும். இந்நாட்டில் பன்னூற்றுண்டுகளாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள், மலேயர், பறங்கியர் என்போரும் சிங்களவருடனும் தமிழருடனும் சமவுரிமைகளையும் வாய்ப்புக்களையும் பெறுவதற்கு உரிமையுடைய சுதேச மக்களாகக் கருதப்படுவதற்கு உரித்துடையோராவர்.

இந்நாட்டு மக்களின் வரலாற்று வளர்ச்சியும் வாழ்க்கை முறையும் ஐரோப்பிய காலனி ஆதிபத்திய நாடுகளின் இலங்கை வருகையால் மிகவும் கொடூரமான முறையில் நிலைகுலைந்தன. போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதியில் ஒரு சுதந்திர இராச்சியத்தையும் தமக்கெனத் தனி அரசொன்றையும் உடையராய் இருந்தனர். போர்த்துக்கேயரின் மிகுந்த படைவலியால் தமிழ் இராச்சியம் போரில் வீழ்த்தப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டது.

போர்த்துக்கேயரைப் பின்தொடர்ந்து வந்த ஒல்லாந்தருக்கும், ஒல்லாந்தரின்பின் வந்த பிரித்தானியருக்கும் தமிழ் இராச்சியத்தின் பிரதேசங்களைப் போரில் வெற்றி கொண்டு கைப்பற்றிய ஒரேயொரு உரிமையைத் தவிர, அப்பிரதேசங்களின்மீது ஆட்சிசெலுத்துவதற்கு வேறு எவ்வித உரிமையும் இருக்கவில்லை. இப்போது இலங்கையை ஒரு குடியரசாக்குவதன் மூலம் குடியேற்றநாட்டு காலனித்துவ ஆட்சியின் இறுதிச்சின்னமும் அகற்றப்படுகின்றமையால், இந்நேரத்தில் தாம் மூன்றரை நூற்றுண்டுகளுக்கு முன்னர் போர்த்துக்கேயருக்குப் போரிலே இழந்துவிட்ட இறைமைமிக்க சுதந்திரத்தை மீள அளிக்குமாறு கோருவதற்குத் தமிழ்மக்களுக்குச் சட்டயுள்ளனர். கடந்த தேர்தலில் ஐக்கிய முன்னணியினர் பெருந்தொகையினராகப் பெற்ற வெற்றியானது, அரசியலமைப்பைப் புரட்சிகரமாக மாற்றுவதற்குச் சிங்களமக்கள் அளித்த ஒரு பொறுப்பாணையென வியாக்கியானம் செய்யப்படுவதாயின் தமிழ்மக்களும் தற்போதைய ஒற்றையாட்சியமைப்பை நிராகரிக்கவும் ஒரு சமஷ்டியாட்சி அமைப்பின் அடிப்படையில் நாட்டின் ஏனைய மக்களுடன் இணையவும் நாடாளுமன்றத்திலுள்ள தமது பிரதிநிதிகளுக்குப் பொறுப்பாணை அளித்துள்ளனர். 1956-ம் ஆண்டுதொட்டு நடந்தேறிய ஐந்து தொடர்ச்சியான பொதுத் தேர்தல்களினதும் முடிவுகள் தமிழ்மக்கள் சமஷ்டிக் கூட்டரசிலிணைந்த ஒரு தமிழரசை நிறுவுவதன்மூலம் தமது தனித்தன்மையைக் காத்துக்கொள்ள உறுதிகொண்டுள்ளதை வெளியிட்டிருக்கின்றன. வெளிநாட்டார் கைப்பற்றுதற்கு முன்பிருந்த நிலைக்கு [illegible] களின் முழுமையான சுதந்திர இறைமைக்கு மாற்றுத்திட்டமான ஒரு சமரச இணக்கமாகத் தமிழ்மக்கள் ஏற்கக்கூடிய குறைந்தபட்சமான திட்டம், ஒரு சமஷ்டி அரசியலமைப்பின்கீழ் தமது சுயாதீனத்தை மீண்டும் நிலைநிறுத்துவதேயாகும்.

உலகின் எல்லாச் சோஷலிச நாடுகளிலும், சிறிய தேசிய இனங்களினது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தலும் சமஷ்டிமுறை அரசாங்கங்களை அமைத்தலுமே சோஷலிசத்திற்கு பூர்வமான உரிமையுண்டு. பிரித்தானிய ஆட்சியாளர் தமிழ் இராச்சியத்தின் பிரதேசங்களை, தம்மால் அவ்வாறே அடிமைப்படுத்தப்பட்ட சிங்கள இராச்சியத்தின் பிரதேசங்களுடன் நிர்வாக வசதிக்காக இணைத்தார்கள் என்ற நிகழ்வு, வெளிநாட்டால் கைப்பற்றுவதற்குமுன் இருந்த அந்தஸ்தை மன்னிக்குமாறு கோருவதற்குத் தமிழர்க்குள்ள உரிமையை மறுதலிப்பதாகாது. தமிழ்ப்பிரதேசங்களைச் சிங்களப் பிரதேசங்களுடன் இணைத்த பிரித்தானியரின் செயலானது தமிழ் இறைமையையழித்ததெனவும் பெரும்பான்மைச் சமூகத்தவர் என்ற முறையில் சிங்களவர் பிரித்தானியரைப் பின்பற்றி அவர் [illegible] பீடங்களில் தமிழர்களை ஆளுவோராக அமர்ந்துகொண்டனர் எனவும் தேவையற்றதோர் ஊகம் இன்று இருப்பதாகத் தோற்றுகிறது. இலங்கையில் சோஷலிசப் பாதையின் மூலம் ஐக்கியமும் முன்னேற்றமும் தோற்றுவிக்கப்பட வேண்டுமாயின் இவ்வூகம் முற்றுக நிராகரிக்கப்படல் வேண்டும்.

தோழர்கள் தமது சுதந்திரமான இறைமையுள்ள தமிழ் அரசை மீள நிறுவுமாறு கோருதற்கு உரித்துடையராயினும் இலங்கையில் வாழும் சிங்களவர்களுடனும் ஏனைய மக்களுடனும் முழுமையான சமத்துவ அடிப்படையில்ஒரு சமஷ்டிக் கூட்டரசின்கீழ் ஐக்கியப்படுவதற்கான தமது தீர்மானத்தை அவர்கள் ஜனநாயக ரீதியில் சுட்டிக்காட்டி அடிப்படையாக விளங்குகின்றன. அல்லாவிடின் இட்லரின் நாஸி முறையிலான தேசிய சோஷலிசமாகவும் அரசின் முதலாளித்துவமாகவும் சோஷலிசம் சீரழிந்துவிடும்.

இப்போது நிலையறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் வரைவு அரசியலமைப்புத் திட்டத்தை இலங்கைக்கென ஒரு சமஷ்டி அரசியலமைப்பை வரையும்போது கருத்துக் கெடுப்பதற்கான ஒரு மாதிரி அமைப்பாகக் கொள்ள வேண்டும் என்பதே எமது எண்ணம். வடமாகாணமும் கிழக்கு மாகாணத்து திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களும் ஒரு கூறை ஆக்குவனவாக அமையும். இது தமிழர் பெரும்பான்மையாக வுள்ள ஓர் அரசாக அமையும். அம்பாறை மாவட்டம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வுள்ள ஓர் அரசாக அமையும்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் மூன்று அரசுகளை நிறுவுவதற்கான யோசனை வரலாற்று, பொருளியல் வாத அடிப்படையிலானதும் ஜனநாயகரீதியிலான அதிகாரப் பன்முகப்படுத்தலின் பயன்களை மக்களில் எல்லாப்பிரிவினரும் துய்த்திடவேண்டுமெனக் கணிக்கப்பட்டதுமாகும். பண்டைய இராசரட்டையின் கேந்திரப்பிரதேசங்களானவையும், நெல், தெங்கு உற்பத்தியில் மேம்பட்டிருப்பவையுமான வட மத்திய வடமேற்கு மாகாணங்கள் ஒரு கூருக அமைவன. கண்டியச் சிங்கள மக்களின் பொதுவான பாரம்பரியங்களுடனும் இடர்பாடுகளுடனும் கூடிய, தேயிலை, இறப்பர் செய்கைகளில் மேம்பட்டு விளங்கும் ஊவா, சப்ரகமுவ, மத்திய மாகாணங்கள் என்பன இன்னொரு கூருக அமைவன. அரசியற்றுறையிலும் பொருளாதாரத்துறையிலும் முன்னேறியுள்ள தென் மாகாணமும் மேல்மாகாணமும் இன்னுமொரு கூருக அமைவன. புதுடில்லி, கன்பரா போன்ற மாநகரங்களின் முன்மாதிரியைப் பின்பற்றி, கொழும்பு மாநகரமும் அதன் சுற்றுப்புறங்களும் குடியரசின் தலைநகரமென்றமுறையில் மத்திய அரசினுல் நிருவகிக்கப்படும். தமிழ் அரசையும் முஸ்லிம் அரசையும் தவிர்ந்த ஏனைய பகுதியில், வேறுஏதேனும் அடிப்படையில் தமது அரசையோ அரசுகளையோ நிறுவிக்கொள்ள உரிமையுடையவர்களான சிங்கள மக்களின் பிரதிநிதிகள், கருத்துக்கெடுத்துக் கொள்வதற்கான தேர்வுமுறையான யோசனையே இது என்பதைக் கூறவிரும்புகிறேம்.

இந்நாடு சோஷலிசப் பாதையில் முன்னேறவேண்டுமாகுல் குடியுரிமை, மொழிப்பிரச்னைகள் முற்றுகத் தீர்க்கப்படவேண்டியதும் மிகவும் அவசியமாகும். ஒரு சோஷலிச நாட்டில் நாடற்றவர்களோ இரண்டாந்தரக் குடிமக்களோ இருக்கமுடியாது. அதே போன்று தமிழ்மக்களுடைய மொழியின் சட்டபூர்வமான அந்தஸ்தை மறுத்ததன்மூலம் அவர்கள் மீது பொறிக்கப்பட்டுள்ள இழிவுச்சின்னம் அகற்றப்படுதல்வேண்டும். சோஷலிச வாழ்க்கை முறையை நடைமுறைப்படுத்தற்பொருட்டு எல்லா ஏற்றத்தாழ்வுகளும், குறிப்பாகச் சாதிவேறுபாடுகள் ஒழிக்கப்படல் வேண்டும். பொருளாதாரக்குறிக்கோள்களைப்பற்றி நாம் குறிப்பிட்டுள்ள அத்தியாயம், முழுமையான சோஷலிசச் சமுதாயம் எவ்வாறு நிறுவப்படல்வேண்டும் என்பதைக்காட்டும்.

இந்நாட்டில் வதியும் வெவ்வேறு இனங்களின் ஐக்கியத்தை நிலைநாட்டி அவற்றின் ஒருமைப்பாட்டை உருவாக்குவதுடன், அதேநேரத்தில் அவற்றுள் ஒவ்வொரு குழுவின் பண்பாட்டினதும் மொழியினதும் தனித்துவத்தையும் பேணவேண்டுமென்ற உண்மையான பெருவிருப்பினுலேயே இப்பொது நிலையறிக்கையும் அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் வரைவு அரசியலமைப்புத் திட்டமும் சமர்ப்பிக்கப்படுகின்றன. சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினத்தினருடன் இரண்டறக்கலந்து அதனுல் சிறுபான்மையினரின் தனித்தன்மையை அழித்துவிடுவதற்கான ஏதேனும் முயற்சி இந்நாட்டைப் பிரிப்பதற்கே வழிவகுக்கும். எல்லாக் குறுகிய வெறுப்புணர்வுகளையும் முன்னுறுதப்பெண்ணங்களையும் புறத்தே ஒதுக்கிவிட்டு, சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் விலக்கிவிட்டு, உண்மையான சோஷலிச உணர்வுடன் ஓர் அரசியலமைப்பை உருவாக்கும் பணியை மேற்கொள்ளுமாறு, குறிப்பாக நாடாளுமன்றத்திலிருக்கும் சோஷலிச வாதிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறேம்.

(தொடரும்)

கிழக்கு மாகாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் கிடைக்கவும் அமைச்சு இந்தத் திட்டத்தை கொண்டுவருகிறது. இந்த நல்ல நோக்கத்துடன் இந்தத் திட்டம் என்றாலென்ன வேறு எந்தத் திட்டம் என்றாலென்ன மக்கள் நிச்சயம் வரவேற்பர்.

விலக்கல்டுப்பாட்டு அதிகாரிகள், கூட்டுறவுப் பரிசோதகர்கள் இப்படி உத்தியோகத்தர்கள் பலர் இந்தக் கடமைகளுக்கென்றே நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் தவிரச் சிலசில சந்தர்ப்பங்களில் இப்பொறுப்பு பொலிஸாரிடமும் ஒப்படைக்கப்படுவதுண்டு. இந்த

...டக்கூடியதுமாகும்.

ஆனாலும் தொகுதிப் பிரதிநிதிகள் இந்த உத்தியோகப் பற்றற்ற பரிசோதகர்களை நியமிப்பதற்குக் கொடுக்கும் பெயர்களைத் தெரிவுசெய்யும் விஷயத்தில் கட்சி அரசியலையும், தமது அடுத்த தேர்தல் வெற்றிவாய்ப்பையும், தமது வெற்றிக்காக உழைத்த தமது 'விசுவாசி'களையும் கருத்திற்கொள்ளாது ஊழல்களைக் களைந்து மக்கள் நலன் பெறவேண்டுமென்ற மனப்பான்மையுடையவர்களை மனதில் வைத்துச் சிபார்சு செய்யவேண்டும்.

## பஸ் சாரதிகள்

அவதானமும் திறமையும் உள்ள பஸ் சாரதிகளுக்கும் பஸ் 'கண்டக்டர்'களுக்கும் ஜப்பான், இந்தியா, பிரிட்டன், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ரஷ்யா போன்ற வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கு "ஸ்கொலஷிப்" எனப்படும் உபகாரச் சம்பளத் திட்டம்கொண்டுவரப்படவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. பஸ் சாரதிகளுக்கும் கண்டக்டர்களுக்கும் மட்டுமல்ல இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்குமே இது ஒரு நல்ல-இனிப்பான-செய்தியாகும்.

இப்போதெல்லாம் பஸ்களில் ஏறும் பிரயாணிகளும் பஸ்களில் பிரயாணம் செய்பவர்களின் குடும்பத்தவர்களுக்கும் ஏன் பஸ் போக்குவரத்துச் சேவை நடைபெறும் பாதைகளில் செல்லும் இதர மக்களுக்கும் கூட இன்றோ, இப்போதோ, இக்கணத்திலோ உயிர் போகலாம் என்ற அச்சத்துடனும், அவநம்பிக்கையுடனும் தான் செல்லவேண்டியிருக்கிறது. சாரதிகள் ஒருபுறமிருக்கட்டும் கண்டக்டர் என்ன செய்வாரோ என்ற அச்சம் இல்லாமலா?

இந்த உபகாரச் சம்பளத்திட்டம் சாரதிகள் அவதானமாகத் தங்கள் கடமையைச் செய்யவும் கண்டக்டர்கள் பணிவுடன் நடந்துகொள்ளவும் உதவவேண்டும்.

உபகாரச்சம்பளத் திட்டத்தின்கீழ் வெளிநாடு சென்று வரும் பஸ் சாரதிகளும், கண்டக்டர்களும் அங்குள்ள பஸ்கள், அங்குள்ள வீதிகள், அங்குள்ள பிரயாணிகள் இங்கு இல்லையே என்று சொன்னால் என்ன செய்வது?

## மரண அறிவித்தல்

**பொன். அப்புக்குட்டி**

சைவசிகாமணி சமயப்பிரசாரகர், சிவபூஜாதுரந்தரர் சைவசமயப் பிரசங்க இரத்தினம் பொன் அப்புக்குட்டி அவர்கள் திருக்கார்த்திகை அன்று 12-12-70ல் சிவபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 13-12-70ல் 161, சட்டநாதர் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். தகவல்: அ. வாமதேவன்,

2162

## பொலிஸ் நிலையம்

அம்பன், சனி

மாங்குளம் பொலிஸ் நிலையக் கட்டிடவேலைகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டன. புதிய பொலிஸ் நிலையம் அடுத்தாண்டு தொடக்கத்தில் திறக்கப்படலாமெனத் தெரிய வருகின்றது.

## சமஷ்டியால்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யும். அங்கு ஏற்றத்தாழ்வு இராது இன்று சமுதாயத்தில்பல பிரச்னைகள், சுபீட்சமாக வாழமுடியாது. வேலையில்லாத் திண்டாட்டம்ஒருபுறம், விலைவாசிகள் ஏற்றம் மறுபுறம். இந்த நிலையில் சோஷலிச சமுதாயம் எனக் கூறமுடியுமா?

திருவாளர்கள்: ஹன்டி பேரின்பநாயகம், எல்.ஆரியரன்சா, ஏ. எஸ். கனகரத்தினம், எம். கார்த்திகேசன், எம். நலப்பனுவ, கலாநிதி சின்னத்தம்பி ஆகியோரும் கருத்தரங்கில் பங்குபற்றினார்கள்.

(இவர்களின் உரைகள் நாளைய பதிப்பில் வெளிவரும்).

குடியரசாக்குவதன் மூலம் குடியேற்றநாட்டு காலனித்துவ ஆட்சியின் இறுதிச்சின்னமும் அகற்றப்படுகின்ற ...தை வெளியிட்டிருக்கின்றனர். வெளிநாட்டார் கைப்பற்றுதற்கு முன்பிருந்த நிலைக்கு-அதாவது தமிழ்மக் ... சமூகத்தவர் என்ற முறையில் சிங்களவர் பிரதிநிதியானியரைப் பின்பற்றி அவர்களமர்ந்த பீடங்களில் தமி... ...ஒரு சமஷ்டி அரசியலமைப்பை வரையும்போது கருத்துக் கெடுப்பதற்கான ஒரு மாதிரி அமைப்பாகக் கொள்ள வேண்டும் என் ... அரசையோ அரசுகளையோ நிறுவிக்கொள்ள உரிமையுடையவர்களான சிங்கள மக்களின் பிரதிநிதிகள், கருத்துக்கெடுத்துக் கொள் ... மன்றத்திலிருக்கும் சோஷலிச வாதிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

(தொடரும்)

# 2-வது மகாயுத்தத்தின் பின் கூட்டுறவு இயக்கத்தின் பயன்

— ரி. முருகேசு —

(தலைமைக் காரியாலயப் பரிசோதகர் யாழ். கூட்டுறவு இலாகா)

எமது நாட்டின் கிராமப்புறங்களில் கூட்டுறவு ஒரு வாழ்க்கை முறையாக அமைந்திருக்கிறது. சாதாரணமாகக் கூட்டுறவு என்ற சொல். பலர் கூடி ஒற்றுமையாக ஒன்றுபட்டு சேர்ந்து தொழிற்படுதலையே குறிப்பிடுகிறதென்றும் விசேஷமாக பொதுத் தேவையைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதற்காக பலர் தாங்களாகவே ஒன்று சேர்ந்து செயல்படும் நிறுவனம்எனப் பொருள்படும் என கல்வேட் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களை விசேஷமாக பின்தங்கிய பொருளாதார நிலையையுடைவர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும் சக்தி வாய்ந்த ஒரு ஆயுதம் கூட்டுறவு எனக் கூறப்படுகிறது. இக்கூட்டுறவு இயக்கத்தின் முக்கியத்துவம் இன்றியமையாததன்று. 2-வது உலகமகாயுத்தத்தின்போது தெரியவந்தது. அந்த வேளையில் அப்போதுள்ளசிறிதளவுபொருட்களை மக்களுக்குவிநியோகிப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களும் கடைகளும் பயன்டுத்தப்பட்டன. அன்லைடநாடுகள் பொருமை கொள்ளத்தக்க அளவில் இலங்கை கூட்டுறவு இயக்கம் திடீரெனப்பொருட்கள்விநியோகிப்பதில் மிகத் தீவிரமாகக் கடமையாற்றியது.

2வது உலக மகாயுத்தம் முடிவடைந்து நிலைமை சீரானதும் இக்கூட்டுறவு இயக்கம் தனது கவனத்தை உணவுற்பத்தியில் செலுத்தியது. இதனால் நாட்டின் பல பகுதியிலும் கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனைநிலையங்கள் நிறுவப்பட்டன. கூட்டுறவுச்சங்கங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து பின்னர். லட்சிய சங்கமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்உருவானது. விவசாயக்கடன் விவசாயவிஸ்தரிப்பு விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்தல், நுகர் பொருட் களைவிநியோகித்தல்போன்ற சகல வேலைகளையும் இப்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கவனிக்கிறது

### யாழ்ப்பாணம் முதலிடம்

கூட்டுறவுமுறை யாழ்ப்பாணத்தில் வெற்றியளித்துள்ளது என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்றாகும், யாழ்ப்பாண விவசாயி சிக்கனமாகவும் முயற்சியுடையவனாகவிருப்பதுமே இவ்வெற்றிக்குக் காரணமாகும். தனக்கு அளிக்கப்படும் வாய்ப்புகளைத் தவறவிடாதுபயன் படுத்துதல் யாழ்ப்பாண விவசாயியின் ஒரு அருங்குணமாகும்.

கூடியதாகவிருக்கிறது. இவ்வாறு கூட்டுறவு சங்கங்கள் பம்புகளை வழங்கியுள்ளதால் பயிர்ச் செய்கையைவிஸ்தரிக்கஉதவியது. குறிப்பாகஉப உணவுச் செய்கைக்குப் பெரிதும் உதவியது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் விவசாயத்துக்குத் தேவையான மற்றும் உபகரணங்களையும் பொருட்களையும் விவசாயிகள் இலகுவாகப் பெறும் வாய்ப்புஏற்பட்டது. இதனால் மேலும் உணவுற்பத்திப் பெருக்கம் அதிகரித்தது.

நல்லமுறையில் அமைந்த கூட்டுறவு வங்கிமுறையும் அமைத்துள்ள கூட்டுறவா

## "யாழ்ப்பாணம் முன்னணிவகிக்க சிக்கனமும் முயற்சியும் காரணம்"

வெற்றிகரமான கூட்டுறவுக்கு நேர்மை, முயற்சிஆகிய இரண்டுமே காரணமாகும். எனவே இந்த இருகுணங்களாலும் நிறையப்பெற்ற யாழ்ப்பாண மனிதன் இக் கூட்டுறவியக்கத்தைவெற்றிகரமாக நடாத்தி வருவதில் ஆச்சரியப்படத்தக்க தொன்றுமில்லை. வரண்ட பகுதியாகிய யாழ் குடாப்பகுதிக்கு நீர்ப்பாசனவசதி தேவை. கிணறுகள் குளங்கள் நிறைந்த இப்பகுதிக்கு தண்ணீர் இறைக்கும்பம்புகள்தேவை.

### சங்கங்களின் உதவி

கூட்டுறவு விவசாய உற்பத்தி, விற்பனை சங்கம் நிறுவப்பட்டதால் யாழ். விவசாயி மேற்குறிப்பிட்ட முக்கிய தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக விருந்தது இந்தச் சங்கங்களே யாழ்ப்பாணத்தில் நீர்ப்பாசனப்பம்புகளைஉபயோகிப்பதற்கு வழிவகுத்தன எனில் மிகையாகாது. இந்தப்பம்புகளை இச்சங்கங்கள் மூலம் விவசாயிகள் கடனுகக் கட்டுப் பணத்துக்குப் பெறக்

ளர்கள் என்றென்றும் நன்றிக்குரியவர்களாவர். யாழ்ப்பாண கூட்டுறவு மாகாண வங்கியும் முக்கியநகரங்களிலுள்ள அதன் கிளைகளும் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிதேவைகளை உடனடியாகக் கவனிக்கின்றன. வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சங்கம் சங்கங்களுக்குத் தேவையான விவசாயத் தேவைகளைக் கவனிப்பதோடு இந்த சங்கங்கள் உற்பத்தி செய்து வழங்கும் பொருட்களையும் சந்தைப் படுத்துகிறது. வடபகுதி கூட்டுறவு சம்மேளனம் இச்சங்கங்களின் மற்றைய தேவைகளைக் கவனிக்கிறது, அதாவது கல்வி வசதியளித்தல், பயிற்சி வகுப்புக்கள் நடத்துதல் போன்றவற்றை இதுகவனிக்கிறது. இம்மாவட்டத்திலுள்ள கூட்டுறவு இயக்கம் விவசாயம் தவிர்ந்த மற்றைய துறைகளிலும் தனது சங்கங்கள், டிப்போக்கள், விற்பனைநிலையங்கள் மூலமாகவும் உதவி செய்கிறது'

ளன. யாழ் கூட்டுறவு ஜவுளி சங்கங்களின் சமாசம் இத்தகைய ஜவுளி ஆலைகளுக்கு தேவையான நூல் முதலியவற்றை வழங்குகிறது, இச்சங்கங்களில் உற்பத்தியாகும் ஜவுளிகளையும் சந்தைப்படுத்தும் வேலையையும் இச்சமாசம் கவனிக்கிறது, அடுத்து வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தனது சங்கங்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்குகிறது, யாழ் துறைமுக சேவைகள் கூட்டுறவுச் சங்கம் காங்கேசன்துறைக்கு வரும்உணவுக் கப்பலிலிருந்து உணவுப் பொருட்களை இறக்கும் வேலையைமேற்கொண்டு600 பேருக்கு வேலைவாய்ப் பளித்துள்ளது,

யாழ்ப்பாணத்தில் எல்லாமாக 1126சங்கங்கள் உள்ளன, கூட்டுறவு மூலமும் கூட்டுறவு ஒன்றினலும்தான் தனிப்பட்ட ஒருவன் முன்னேறி விஞ்ஞானம்தொழில் நுட்பம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிநாட்டின் நலனுக்காகப்பாடுபடலாம்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கிழக்கு மாகாண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவரும் ஒரு பறங்கி மாணவரும் தகுதியாகக் காணப்பட்டனர். கடந்த காலங்களெனில் இவர்களை ஆங்கிலமூலம் போதனைக்குச் சேர்த்திருக்கலாம். இத்துறையில் ஆங்கிலம் மூலம் போதிக்கப்பட்டதே இதற்குக்காரணம். இம்முறை பொறியியல் பட்டப்படிப்புக்கு அதிகமாணவர்களைச் சேர்ப்பதென முடிவுசெய்து அதன்படி அதிக புள்ளிகள் பெற்றவர்கள் பேராதனையிலும் மற்றவர்கள் கட்டுப்பெத்தையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

பொறியியல் பிரிவில்

### மின்தறி ஆலைகள்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மின்தறி ஆலைகளையும் நிறுவி ஜவுளி உற்பத்தியையும் ஆரம்பித்துள்ளன. இந்தத் திட்டத்திற்கு யாழ் கூட்டுறவு மாகாண வங்கி நிதியுதவியளித்துள்ளது. இதைவிடமற்றும் 4 சங்கங்களும் மின்தறி ஆலைகளை நிறுவத் தீர்மானித்துள்

இம்முறை சேர்க்கப்பட்ட 267 மாணவரில்பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு 151 பேரும் கட்டுப்பெத்தைக்கு 116 பேரும் அனுப்பப்பட்டனர்.

பொறியியல் துறைக்குப் பேராதனையில் அனுமதிக்கப்பட்ட மாணவரில் 86 சிங்கள மாணவரும் 60 தமிழ் மாணவரும், 4 முஸ்லிம் மாணவரும் ஏனையவர் ஒருவரும் அடங்குவர். கட்டுபெத்தை பொறியியல்துறையில் 60 சிங்களவரும், 53 தமிழரும், 3 முஸ்லிம்களும் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியத்துறைக்கு 137 சிங்கள மாணவரும், 103 தமிழ் மாணவரும், 6 முஸ்லிம் மாணவரும், ஏனையவர் 6 பேரும் அனுமதிக்கப்பட்டனர். பல்வைத்தியத்துறைக்கு 17 சிங்களவரும், 24 தமிழரும், ஒரு முஸ்லிமும் அனுமதிக்கப்பட்டனர்.

25 சிங்கள மாணவரும், 17 தமிழரும், 2 முஸ்லிம்களும், ஏனைய ஒருவரும் விவசாயத்துறைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

15 சிங்களவரும், 5தமிழரும், ஒரு முஸ்லிமும் மிருகவைத்தியத்துறைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

சிங்களவர் 111 பேரும், தமிழர் 41 பேரும்,முஸ்லிம் 4 பேரும்ஏனையவர்4 பேரும் பௌதிக விஞ்ஞானத்துறைக்கும், 178 சிங்களவரும் 92 தமிழரும், ஒரு முஸ்லிமும், 4 ஏனையவரும் உடற்கூறு சாஸ்திரத்துக்கும், 16 சிங்களவரும் 28 தமிழரும், ஒரு முஸ்லிமும் கட்டிடக்கலைத்துறைக்கும் அனுமதிக்கப்பட்டனர்.

உயர்கல்விப்படிப்புக்கு 50 சதவிகித கிராமப்புற மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்ற கொள்கையினால் வல்வெட்டித்துறை மற்றும் கிழக்குமாகாணம் போன்ற பகுதி மாணவர்களுக்கும் உயர்கல்வி பெறும் வசதி ஓரளவாவது கிடைத்தது.

இதேகொள்கையை கல்வி அமைச்சு எதிர்காலத்திலும் அமுல்செய்து உயர் கல்வி பெறுவதில் சகலருக்கும் சமவாய்ப்பு அளிக்கப்படும்.

அதிர்ஷ்டசாலியானநகர்ப்புற மாணவனுடன்கிராமப்புறமாணவன் சுயமாகப் போட்டியிடக்கூடிய ஒருநிலை ஏற்படும்வரை அவனுக்கு எல்லாவகையான கல்வி வசதிகளும் ஒத்தாசைகளும் செய்துகொடுக்கப்படும்.'

## மரண அறிவித்தல்

**கந்தையா நமசிவாயம்**

வண்ணார்பண்ணை கந்தையா நமசிவாயம் அவர்கள் சிவபதமடைந்து விட்டார்கள். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி போர்டிங் மாஸ்டரும் நாகம்மாவின் அருமைக் கணவரும் சோதிப்பிள்ளை, பாக்கியம் வாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரத்தினத்தின் மைத்துனரும், தங்கவேணியன், வைகுந்தநாதன். திருவேங்கடவல்லி ஆகியோரின் தந்தையும் வன்னியசூரியர் வைத்தீஸ்வரன், சரஸ்வதிதேவியின் மாமனருமாவர். அன்னரது பூதவுடல் இன்று 13-12-70 பிற்பகல் 2-30 மணிக்கு 422, கே. கே. எஸ். வீதியிலுள்ள இல்லத்திலிருந்து ஈமக்கிரிகைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

2161

## மரண அறிவித்தல்

**திருமதி மங்களம்மாள்**

திருமதி மங்களம்மாள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு மாசிலாமணிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற B. A, தம்பி அவர்களின் புதல்வியும், டாக்டர் பரமநாயகம். ஆனந்தசுந்தரம் காவேரிஅம்மாள் ஆகியோரின்சகோதரியும் பாஸ்கரன் மகேஸ்வரிதேவி புவனேஸ்வரிதேவி ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற கலைப்புலவர் திரு நவரத்தினம, பத்மினி சிருப்பர் தில்லையம்பலம் ஆகியோரின் மாமியாரும் கல்யாணி, தயாளன் சுபாஷினி ஆகியோரின் பாட்டியாரும் ஆவர்,

அன்னரது பூதவுடல் ஈமக்கிரிகைகளுக்காக B A தம்பி வீதியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி அளவில்கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

2163

அம்பன், சனி

சென்ற மாதம் தொடக்கம் கௌதாரிமுனைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட நாகர்கோயில் கிராமசேவையாளர் திரு. பி. அ. செலஸ்தின் இராசாவினது இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.